உ

சைவ பரிபாலன சபை வெளியீடு
ஆரம்பம்: விரோதி ஸூ ஆவணி மீ 26 ஆம் உ
(1889)

பிரதி விலை: ரூபா 10
செய்தித் தாளாகப் பதிவு பெற்றது.

# இந்து சாதனம்

சிவமயம்

(HINDU ORGAN)

புத்தகம்: 111

விக்கிரம வருடம் ஐப்பசித் திங்கள் 26 ஆம் நாள்
(11-11-2000) ஐப்பசிப் பூரணை

இதழ்: 08

## தடுப்புமுகாமில் காட்டுமிராண்டித்தனம்

## அரச பாதுகாப்பிலிருந்த

## தமிழ் இளைஞர்கள் கொன்று குவிப்பு

# குற்றம் கடிக! குடி காக்க!

**பண்டாரவளையில் அரச பாதுகாப்பிலிருந்த இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்டனர். இது போன்ற காட்டுமிராண்டித்தனமான செயல்கள் நடைபெறாதிருக்க அரசு விழிப்புணர்வுடன் இருந்து செயற்படாதது மன்னிக்க முடியாத குற்றம். முன்னர் இவ்வாறான அநாகரிகச் செயல்களில் ஈடுபட்டோரைக் கண்டுபிடித்துத் தண்டனை வழங்காமையும் இவ்வாறான மனித நேயமற்ற செயல்கள் நடைபெற உந்துசக்தியாக அமைகிறது.**

தீபாவளித் திருநாளன்று பெருஞ்சோகச் செய்தியொன்று தமிழ் நெஞ்சங்களை உலுப்பி மனங்கரைய வைத்தது. அரசின் பாதுகாப்பில் வைக்கப்பட்டிருந்த இருபத்தைந்து தமிழ் இளைஞர்கள் ஈவிரக்கமின்றி அடித்தும், வெட்டியும், சித்திரவதை செய்தும் கொல்லப்பட்டனர். இதை விட அதிக தொகையினர் படுகாயப் படுத்தப்பட்டனர் என்பதே அச் செய்தி.

எந்தவொரு சந்தேகநபரும் - சிறைக்கைதியாகினும் சரி - வழக்குத் தீர்ப்பை எதிர்பார்த்திருப்பவராயினும் சரி - விசாரணைக்குட்படுத்தப்பட்டிருப்பவராயினும் சரி - தடுப்புக் காவல் கைதி என்றாலும் சரி - அவர் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்படும்வரை அவர் நிரபராதியே,

(12ம் பக்கம் பார்க்க)

### ஆறுமுகநாவலனை அர்ச்சித்து அடிபணிவோம்

சங்கேந்து மாற்கரிய சங்கரனைத் தன்னிதய
பங்கேருகம் வைத்த பண்பானை — எங்கோனை
ஆறுமுகநாவலனை அர்ச்சித்து அடிபணியிற்
பாறும் பவநோய் பறிந்து.

— வித்துவசிரோமணி ச. பொன்னம்பலபிள்ளை

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உ

# ஆறுமுகநாவலர் முதல் பண்டிதமணி வரை சைவம் வளர்த்த சான்றோர்கள் - (6): மகான் காசிவாசி சி. செந்திநாத ஐயர்

— பல்கலைப் புலவர் க. சி. குலரத்தினம் —

(புத்தகம் 111 இதழ் 6 இன் தொடர்ச்சி)

இன்னும் வியாசபகவான் செய்த உத்தரமீமாம்சை என்னும் பிரமசூத்திரத்துக்குத் தனித்தனி உரை செய்தவர்களாகிய சங்கராசாரியர் சொன்ன ஏகான்மவாத நிர்க்குணப் பிரமநிலை, இராமானுசாசாரியார் சொன்ன விசிட்டாத்துவித சகுணநிலை, நீலகண்ட சிவாசாரியர் கண்ட சிவாத்துவித அத்தியாசிரம நிலை என்பவற்றை யெல்லாம் இடங்கள் வகுத்து நிறுத்தி விளங்கவைத்துள்ளார்.

சுத்தாத்துவித சைவசித்தாந்த உண்மை நிலையை விளக்கும் வரைபடத்தில், ஞானசரிசனம் முதல் தொடங்கிப் பதினெட்டாம் படியில் பரமானந்தாவச சாயுச்சிய சிவபோக நிலையைக் காட்டியுள்ளார். இது சைவசித்தாந்தத்துக்கே தனிச் செம்மை வாய்ந்த பெருஞ் சோபானமாகும்.

இங்ஙனமே படிமுறையில் உச்சியில் பிரணவப் பொருள் சிவன் என்பதை விளக்கியுள்ளார். சிவ, உமா சம்பந்தம், சிவலோக அமைவு, ஆத்மா, முப்பத்தாறு தத்துவம், பாச நிலை என்பனவற்றை எல்லாம் ஓங்காரத்துள் அமைத்து விளக்கியுள்ளார். இத்தகைய விளக்கப்படம் வெளியிட்ட பெருமையை வியந்த சைவத் தமிழன்பர்கள் ஐயரவர்களுக்கு சித்தாந்தபாநு என்னும் சிறந்த பட்டத்தைச் சூட்டி மகிழ்ந்தார்கள். ஐயரவர்கள் இதனையடுத்து சைவசித்தாந்த அத்துவிதப்பட வினாவிடை என்றொரு நூலையும் எழுதி வெளியிட்டார்கள்.

## அருட்பா மருட்பா வழக்கு

ஐயரவர்கள் தமிழ் நாட்டில் வாழ்ந்த காலத்தில் 1904 ஆம் ஆண்டின் யூன் மாதத்தில் சென்னை பொலிஸ் நீதிமன்றத்தில் பரபரப்பான வழக்கு ஒன்று விசாரிக்கப்பட்டு வந்தது அது எப்பவோ முடிந்த காரியமொன்றை யிட்டு மறுதலித்த காய்ச்சலாகும்.

மேலைப்புலோலி நா. கதிரைவேற்பிள்ளையவர்கள் திரு. வி. க. முதலான இளைஞர்கள் மத்தியில் பரபரப்பாகச் சைவப்பிரசங்கங்கள் செய்து வந்த காலத்தில், வல்லடி வழக்காக வந்த வழக்காகும். அது 1904 ம் ஆண்டில் 24533 ஆம் இலக்கத்தை உடையது. பிள்ளையவர்கள் திருமுறைகளின் பெருமை பேசியபோது, அருட்பா என்றால் என்ன என்றும், மருட்பா என்றால் என்ன என்றும் வரைவிலக்கணம் வகுத்தபோது மருட்பா சபையினராய சிலர் அப்படியுமாமோ என்று கொதித்து எழுந்து வைத்த வழக்கு.

பிள்ளையவர்கள் சார்பில் சட்டத்தரணிகளாய விசுவநாத சாஸ்திரிகள், ராம சாஸ்திரிகள் என்னும் பெரியார்கள் பேசினார்கள். அவர்கள் ஆதாரமாகக் காட்டிய நூல்கள் எண்ணிறந்தவை. அத்தனை ஆதாரங்களுக்கும் பின்னணியில் நின்று சாட்சிசொல்லி உதவி புரிந்தவர் செந்திநாதையர் அவர்களாவர்.

வழக்கை விசாரித்த நீதிபதி அஜீஜுடின் சாயுபுபஹதூர் அவர்கள் அருட்பா, மருட்பா என்பனவற்றின் பேதத்தை நன்குணர்ந்து, பிள்ளையவர்கள் பேசியது சரியென்று தீர்ப்பளித்ததும், வழக்குத் தள்ளுப்பட்டது.

பிள்ளையவர்கள் தாம் பெற்ற வெற்றி, ஐயரவர்கள் ஈட்டித்தந்த வெற்றியென்று கொண்டாடிப் பாட்டிசைத்துப் பாராட்டிக் கௌரவித்தார். பிள்ளையவர்கள் எழுதிய வாசகமும் பாக்களும் மிக நீளமானவை. அவற்றின் சுருக்கத்தின் சுருக்கத்தையாவது அறிதல் நன்று.

"நீதிபதி முதற் பலரும் வியப்புறச் சுவாமிகள் எழுந்தருளித் திருவாய் மலர்ந்தருளிய வாக்கன்றோ எமக்கு இப்பெருஞ் செயத்தை உண்டாக்கிற்று! இஃது எல்லோரும் அறிந்ததொன்றே. சுவாமிகள் பரங்குன்று நோக்கி என்னைப் பார்த்து, ''நின்வழக்கு நினக்குச் செயமாகவே முடியும். அங்ஙனமின்றி மாறுபடவரின் நீறு கண்டிகை வேல் மயில் என்பனவற்றை வேண்டிலன்'' என அன்பால் நைந்து அருளிய ஆசிமந்திரம் என் மனத்தை விட்டகலாது.

இவ்வாறு கதிரைவேற்பிள்ளையவர்கள் ஐயரவர்களின் ஆளுமை பற்றி அருமையாகப் பாடியும் எழுதியும் உள்ளார். அவை விரிக்கிற் பெருகி நீளுமெனவே இவற்றோடு அமைவோமாக.

## அச்சுக்கூடம் தாபித்தமை

யாழ்ப்பாணத்திலே தோன்றித் தமிழ் நாட்டுக்கேகிச் சைவத் தமிழ்த்தொண்டு செய்த ஆறுமுகநாவலரவர்கள் அங்கே வித்தியானுபாலன யந்திரசாலையைத் தாபித்தார். அவர் வழியில் சுவாமிநாத பண்டிதர் சைவ வித்தியானுபாலன யந்திரசாலையைத் தாபித்தார்.

செந்திநாதையரவர்கள் சைவத் தமிழ்த்தொண்டு நிரம்பச் செய்தல் வேண்டும். தமிழ்நாடு முன்னேற வேண்டும் என்னும் கருத்துக் கொண்டவர்களாகிய தேவகோட்டைப் பெரும் புரவலர்களாகிய சோமசுந்தரஞ் செட்டியார், இராமநாதன் செட்டியார் ஆகிய இருவரும் கொடுத்த திரவியங் கொண்டு திருச்செந்தூர் முருகனை நினைந்து செந்திநாதைய சுவாமி யந்திரசாலை என்னும் பெயரில் ஒரு அச்சுக்கூடத்தை 1906 ஆம் ஆண்டில் தாபித்தார்கள்.

## கட்டுரைகளும் கண்டனங்களும்

ஐயரவர்கள் எழுதிய கட்டுரைகள் கண்டனங்களின் எண்ணிக்கை அதிகம். அவர் இங்கும் அங்குமாக எழுதியவை பல. அச்சுக்கூடந் தாபித்தபின் அங்கிருந்து எழுதி அச்சிட்டவை வைதிக சைவசித்தாந்த சமயத்தாபனத்தின் பொருட்டானவை.

கோட்டையூர் என்னும் இடத்தில் வாழ்ந்து வந்த சந்நியாசி ஒருவர், ஆதி சைவகுலத்திற் பிறந்தவருடைய முகத்தைத் தகர்க்கும் கோல் என்னும் பொருள்

(15 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடர்

[ திருச்செங்கோடு என இப்போ வழங்கப்படுவதும் முன்னர் கொடிமாடச் செங்குன்றூர் என அழைக்கப்பட்டதுமாகிய கொங்கு நாட்டுத் திருத்தலம் தேவாரப் பாடல் பெற்ற பெருமை மிக்க சிவத்தலமாயினும் முருகப்பெருமானுக்கு மிகவும் உகந்த திருத்தலமுமாகும். திருமுறைத் தலமான இங்கு இறைவன் அர்த்த நாரீஸ்வரராக அருள் புரிகிறார். இக்கோவில் மகா கும்பாபிஷேகம் ஐப்பசி இருபத்துமூன்றாம் நாள் (08-11-2001) நடைபெற்றது. அதையொட்டி இக்கட்டுரை பிரசுரமாகிறது. ]

**"மாலோன் மருகனை மன்றாடி மைந்தனை**
**வானவர்க்கு**
**மேலான தேவனை மெய்ஞ்ஞான தெய்வத்தை**
**மேதினியில்**
**சேலார் வயற்பொழில் செங்கோடனைச் சென்று**
**கண்டு தொழ**
**நாலாயிரங் கண் படைத்திலனே அந்த நான்முகனே"**

— கந்தரலங்காரம்

அருணகிரியாரின் இந்த மனக்குறை - ஏக்கம் - புரிந்து கொள்ளக் கூடியதுதான். வலக்கையில் வேலை ஏந்தி இடக்கையை இடுப்பில் ஊன்றியவாறு நிற்கின்ற செங்கோட்டுக் குமரனின் அந்த அழகொழுகு நிலையைக் கண்டால் யாருக்குத் தான் அந்த ஏக்கம் வராது? வெள்ளைப் பாஷணத்தால் ஆன மூன்றரை அடி உயரமான சுயம்பு மூர்த்தி, உளிபடாத விக்கிரகம் சுவாமியின் நெற்றியில் பள்ளம் - அதனால் பெரிய பொட்டுப்போல சந்தணத்தை அப்பியிருப்பார்கள்.

அருணகிரியாருக்கு செங்கோட்டு வேலவர் மீது மிகுந்த ஈடுபாடு. இருபத்தேழு திருப்புகழ்ப் பாடல்கள் பாடியுள்ளார். கந்தரலங்காரம் நூறு பாடல்களில் எட்டுப் பாடல்களில் செங்கோட்டு வேலவரைப் போற்றியுள்ளார்.

**"சேந்தனைக் கந்தனைச் செங்கோட்டு வெற்**
**பனைச் செஞ்சுடர் வேல்**
**வேந்தனைச் செந்தமிழ் நூல் விரித்தோனை**
**விளங்கு வள்ளிக்**
**காந்தனைக் கந்தக் கடம்பனைக் கார்மயில்**
**வாகனனைச்**
**சாந்துணைப் போதும் மறவாதவர்க்கு ஒரு**
**தாழ்வில்லையே"**

என உறுதி கூறும் அருணகிரிநாதர்,

**"தெய்வத் திருமலைச் செங்கோட்டில் வாழுஞ்**
**செழுஞ்சுடரே**
**வை வைத்த வேற்படை வானவனே மறவேன்**
**உனைநான்**
**ஐவர்க்கு இடம்பெறக் காலிரண்டு ஓட்டி அதிலிரண்டு**
**கைவைத்த வீடு குலையுமுன்னே வந்து காத்தருளே"**

என்று அபயம் கேட்கிறார்.

மலைமீதுள்ள கோவிலைச் சென்றடைய 1200 படிகள் ஏறவேண்டும். மேலமாட வீதியிலிருந்து பார்த்தால் இம்மலை பார்ப்பதற்கு நாகம் போன்றிருப்பதால் நாகாசலம் (நாகம் + அசலம் = நாகாசலம், அசலம் = மலை), நாககிரி (கிரி = மலை) என்றும் இம்மலைக்குப் பெயர்.

கந்தரனுபூதிப் பாடல்கள் ஐம்பத்தொன்றில் அருணகிரிநாதர் வேறெந்தத் தலத்தின் பெயரையும் குறிப்பிடாது "நாகாசல வேலவா" என்று இத்தலத்தை மட்டும் குறிப்பிட்டுப் போற்றுவது அவருக்கு செங்கோட்டு வேலவர் மேலிருந்த வாஞ்சையைக் குறிக்கிறது:

**"கூகாவென என் கிளை கூடியழப்**
**போகா வகை மெய்ப்பொருள் பேசியவா**
**நாகாசல வேலவ நாலுகவித்**
**தியாகா சுரலோக சிகாமணியே"**

திருஞானசம்பந்தர் காலத்தில் இத்திருத்தலம் கொடிமாடச் செங்குன்றூர் என அழைக்கப்பட்டது. கொடிகள் அசைந்தாடுகின்ற மாடமாளிகைகள் நிறைந்த செந்நிற மலையை உடைய ஊர் என்று பொருள். குன்று = கோடு = மலை. செங்குன்றூர் என்ற பெயர் வழக்கு மறைந்து இன்று செங்கோடு - திருச்செங்கோடு என வழங்கப்படுகிறது இத்தலம் சேலத்துக்குத் தெற்கே 45 கிலோ மீட்டர் தொலைவில் அமைந்துள்ளது.

கடல் மட்டத்திலிருந்து 1900 அடி (570 மீற்றர்) உயர மலையுச்சியில் அமைந்துள்ள இவ்வாலயத்தின் பிரதான மூர்த்தி அர்த்தநாரீஸ்வரர் (வலது பாதி ஆண் வடிவும் இடது பாதி பெண் வடிவும் கொண்ட மாதொருபாகர்). மூலமூர்த்தி சிவலிங்கத் திருமேனியாக வல்லாது அர்த்தநாரீஸ்வரராக அமைந்திருப்பது இக்கோவில் சிறப்புகளுள் ஒன்று. அர்த்தநாரீஸ்வரர் சந்நிதி மேற்கு நோக்கியும் வேலவர் சந்நிதி கிழக்கு நோக்கியும் அமைந்துள்ளது.

நின்ற நிலையிலுள்ள அர்த்தநாரீஸ்வரர் உருவ அமைப்பும் செங்கோட்டு வேலவர் உருவ அமைப்புப் போலவே அற்புதமானது. ஒரு பாதிக்குப் பிடவையும் மறுபாதிக்கு வேட்டியும் அலங்கரித்த நிலையில் காட்சிதரும் ஐந்தடி உயரமான இப்பேரழகர் விக்கிரகம் சித்தர்களால் வெள்ளை நவபாஷாணச் சேர்க்கையால் அமைக்கப்பட்டதாகக் கூறுகிறார்கள். வேறெங்கும் காண முடியாத அழகிய திருவுருவம்

அர்த்தநாரீஸ்வரர் திருவடியின் கீழ் குளிர்ந்த நீர் சுரக்கிறது. இது தேவ தீர்த்தம் எனப்படுகிறது. இத்தீர்த்தப் பிரசாதம் நாள்தோறும் அடியார்களுக்கு வழங்கப்படுகிறது. மூலமூர்த்தியின் முன்னால் மரகதலிங்கமும் பிருங்கி முனிவரது உருவச்சிலையும் உள்ளது.

பிருங்கி முனிவர் சிவனை வணங்குபவர்; சக்தியை வணங்காதவர். இது அன்னைக்கு அவமானமாகப்பட்டது. ஆகவே அம்முனிவர் வழிபாட்டைப்பெற, இறைவனிடம் வேண்டி அவரது உடலின் இடப்பாகத்தைப் பெற்றுக்கொண்டாளாம். இதைக்கண்ணுற்ற பிருங்கி முனிவர் வண்டு உருவெடுத்து, அர்த்தநாரீஸ்வர வடிவத்தைத் துளைத்துச் சிவனை மட்டும் வலம் வந்து வணக்கி விட்டு, உடம்பிலுள்ள சதையெல்லாம் குதறப்பட்ட நிலையில் வந்து நின்றதாகவும் சிவன் முனிவருக்கு மூன்றாவது கால் ஒன்றை வழங்கியதாகவும் புராண வரலாறு.

(14 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ

# திருக்கார்த்திகைத் தீபத் திருநாள்

சோதியாய்ச் சுடராய் சூழ் ஒளி விளக்காய்த் திகழ் பவன் இறைவன். ஆதியும் அந்தமும் அற்ற கற்பனை கடந்த அரும் பெரும் சோதியைத் தேசுடை விளக்கு களை ஏற்றி வழிபடுகின்ற திருநாள் திருக்கார்த்திகைத் தீபத்திருநாள். இது விளக்கீடு எனவும் அழைக்கப்படும்.

விளக்கீடு கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத் திரத்தன்று கொண்டாடப்படும் அன்று பூரணை தினமாகவும் அமைந்தால் மிக விசேடம் அகநானூற்றுப் பாடல் ஒன்றில், நக்கீரர்

“ மதி நிறைந்து
அறுமீன் சேரும் அகல் இருள் நடுநாள்
மறுகு விளக்குறுத்து மாலை தூக்கிப்
பழவிறல் மூதூர்ப் பலருடன் துவன்றிய விழவு”

எனக் குறிப்பிடுகிறார்

கோச்செங்கணான் என்ற சோழ மன்னன் கணைக் கால் இரும்பொறை என்ற சேர மன்னனோடு கழுமலம் என்ற இடத்தில் போரிட்டான். இதைப் பாடிய பொய்கையார் என்ற புலவர் “போர்க் களத்தில் சிதறிக் கிடந்த இரத்தத் துளிகள் கார்த்திகை விழாவில் ஏற்றி வைக்கப்பட்ட எண்ணற்ற ஒளி விளக்குகளைப் போன் றிருந்தது” எனப் பாடியுள்ளார்.

இவற்றிலிருந்து சங்ககாலத்திலேயே திருக்கார்த் திகைதினம் தீபத்திருநாளாகக் கொண்டாடப்பட்டு வந் ததை அறிந்து கொள்கிறோம்.

திருஞானசம்பந்தப் பெருமான், திருமயிலைத் திருப் பதிகத்தில்,

“வளைக்கை மடநல்லார் மாமயிலை வண்மறுகில்
துளக்கில் கபாலீச் சரத்தான் தொல் கார்த்திகை நாள்
தளத்தேந் திளமுலையார் தையலார் கொண்டாடும்
விளக்கீடு காணாதே போதியோ பூம்பாவாய்”

எனப் பாடியுள்ளார். ஏழாம் நூற்றாண்டினரான சம்பந் தப்பெருமான் “தொல் கார்த்திகை நாள்” எனக் குறிப் பிட்டுள்ளதிலிருந்தும், கார்த்திகை விளக்கீடு மிகப் பழங் கால முதலே கொண்டாடப்பட்டு வருகிறது என்பதை அறிந்து கொள்ளலாம். மேலும் “தையலார் கொண் டாடும் விளக்கீடு” என்பதால் பெண்கள் சிறப்பாகக் கொண்டாடும் விழா விளக்கீடு என்பதும் பெறப்படு கிறது.

தீபத்திருநாள் கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரத்தில் கொண்டாடப்படுகிறது என்பது சிந்த னைக்குரியது. பிரம விட்டுணுக்களின் செருக்கை அடக்க சிவபெருமான் சோதிப் பிழம்பாகத் தோன்றியதும், அப்பிழம்பின் அடி, முடி காணமுடியாது செருக்கழிந்த பிரமவிட்டுணுக்கள் அச்சோதிவடிவைத் தங்களுக்கு எப் போதும் காட்டியருளவேண்டுமென்று பிரார்த்தித்ததும், கார்த்திகை மாதத்து கார்த்திகை நட்சத்திரத்தில் காட்டு வோம்” எனச் சிவனார் அருளியதும் நாமறிந்த புரா ணக்கதை. ஆனால் இப்புராணக் கதைக்குப் பின்னால் ஒளிந்து கிடக்கும் சில உண்மைகளை நாம் அறிந்து கொள்வது நல்லது.

கார்த்திகை நட்சத்திரத்திற்கு அதிதேவதை அக்கினி. இதனாற்றான் இந்நட்சத்திரம் “எரி” எனப் பரிபாட லிலும் “அழல்” எனப் புறநானூற்றிலும் அழைக்கப் பட்டது. ஆறு நட்சத்திரங்களைக் கொண்ட ஒரு தொகுதி விண்மீன்களைத்தான் கார்த்திகை நட்சத்திரம் என்கின் றோம் இந்த ஆறு நட்சத்திரங்களையும் ஆறு கார்த் திகைப் பெண்கள் என அழைப்பது மரபு. ஒரு மாதத் தில் பூரணையன்று பெரும்பாலும் எந்த நட்சத்திரம் அமையுமோ அதுவே அம்மாதத்தின் பெயராக இருக்கும். (இந்துசாதனம் புத்தகம் 110 இதழ் 12 ஐப் பார்க்க) ஆகவே இறைவனை சோதி சொருபமாக வழி பட மிக உகந்த தினம் கார்த்திகைக் கார்த்திகை என் பது பெறப்படுகிறது.

குமார சம்பவத்திற்காகச் சிவபெருமான் தனது ஆறு திருமுகங்களின் நெற்றிக் கண்களிலிருந்தும் சோதிப் பொறிகளைத் தோற்றுவித்தார். அவ்வாறு பொறிக ளும் அக்கினி சம்பந்தப்பட்டமையால் அப்பொறிகளி லிருந்து தோன்றிய ஆறு குழந்தைகளும் கார்த்திகைப் பெண்களால் பாலூட்டி வளர்க்கப்பட்டனர் எனப் பட்டது.

முருகப்பெருமான் வைகாசி விசாகப் பெருநாளில் தோன்றியமையால் ‘விசாகன்’ எனவும் அக்கினி சம்பந் தப்பட்டமையால் ‘அக்கினிகர்ப்பன்’ எனவும் கங்கை யில் தவழ்ந்ததால் ‘காங்கேயன்’ என்றும் சரவணப் பொய்கையில் அவதரித்ததால் ‘சரவணபவன்’ எனவும் அழைக்கப்படுவது போலக் கார்த்திகை மாதர்களால் வளர்க்கப்பட்டபடியால் “கார்த்திகேயன்” எனவும் பெயர் பெற்றான்.

மேற்கூறியவற்றால் சோதி சொருபமான இறைவன் ஆன்மாக்கள் மீது இரங்கி ஆறுமுகப் பரம் பொருளா கத் திருவுருக் கொண்டதால் அக்கினியை அதிதேவதை யாகவுடைய கார்த்திகை நட்சத்திரம் முருக வழிபாட் டிற்கு மிக உகந்த நட்சத்திரமாகின்றது. கார்த்திகை மாதத்துக் கார்த்திகை நட்சத்திரம் திருக்கார்த்திகை என அதிசிறப்படைகிறது.

அடுத்துத் திருவண்ணாமலையில் தீபத் திருவிழா பெருஞ் சிறப்பாகக் கொண்டாடப்படுவது ஏன் என்ற வினாவும் எழுகின்றது. பஞ்சபூதத் தலங்கள் ஐந்து. அவற்றுள் திருவண்ணாமலை தீ (நெருப்பு) க்கு உரிய தலம். அதனாலேயே தீபத் திருவிழா இத்தலத்தில் பெரு விழாவாக அமைகிறது.

அண்ணாமலையின் அடிவாரத்தில் அருணா சலேஸ்வரர் கோவில் அமைந்துள்ளது நினைக்க முத்தி தரும் தலம் இது. உண்ணாமுலை உமையாளொடும் உடனாகிய அருணாசலேஸ்வரரைத் தொழுவார் வினை வழுவா வண்ணம் அறும் எனச் சம்பந்தர் அறுதியிட்டுச் சொல்கிறார். அருணகிரிநாதரின் வாழ்வில் அருள் திருப்பம் ஏற்படக் காரணமான பதி திருவண்ணாமலை. ரமண மகரிஷி தவம் இருந்து அருள்பெற்ற தலம். சிவபெருமான் பிரம விட்டுணுக்களுக்கு சோதிப் பிளம் பாகத் தோன்றிய மலைதான் திருவண்ணாமலையா யிற்று எனக் கூறப்படுகிறது.

(14 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# சைவபரிபாலன சபை
## தோற்றமும் வளர்ச்சியும் பணிகளும் - 5

(புத்தகம் 111 இதழ் 6 இன் தொடர்ச்சி)

### நாவலர் மக்களை இணைந்துச் சாதித்த பணிகள்:

மேலே நாவலர் பணிகளுள் ஒன்பதாவதாக நிரல் படுத்தப்பட்டுள்ளதாகிய தமிழ் மக்களின் பொருளாதார உயர்வுக்கு நாவலர் செய்த பணிகளுள் யாழ்ப்பாணம் - மட்டக்களப்பு வர்த்தக வேளாண்மைச் சங்கம் என்ற அமைப்பு மூலம் கந்தளாய்க் குளத்துக்கு அருகாமையில் 20,000 ஏக்கர் காட்டு நிலத்தை அரசிடமிருந்து பெற்று விருத்தி செய்ய எடுத்த முயற்சிகள், பஞ்சகாலத்தே விவசாயிகள் விதைநெல் இன்றி அல்லல் பட்டபோது, அரசாங்கத்திடமிருந்து விதைநெல் பெற்றுக் கொடுக்க எடுத்த முயற்சிகள் ஆகியவை குறிப்பிடத்தக்கன.

1876 ஆம் ஆண்டு பஞ்சமும் கோதாரி என்ற நோயும் யாழ்ப்பாண மக்களை வருத்திய போது, மக்கள் துயர் துடைக்க நாவலர் ஆரம்பித்து நடாத்திய கஞ்சித் தொட்டித் தருமம், மக்களின் கல்வி, பொருளாதார தேவைகளை அரசாங்கத்துக்குச் சுட்டிக்காட்டி மனுக் கொடுத்து நிவாரணம் பெற்றுக் கொடுத்தல் போன்றவை பத்தாவதாக நிரைப்படுத்தப்பட்டுள்ள நாவலரின் சமூகசேவைப் பணிகளுக்கு உதாரணமாகக் காட்டப்படக் கூடியன.

சேர் பொன். இராமநாதன் அவர்கள் இலங்கைச் சட்ட நிரூபண சபைக்குத் தமிழ் மக்களின் பிரதிநிதியாக தெரிவு செய்யப்படுவதில் நாவலர் ஆற்றிய பெரும் பங்கு பதினோராவதாக நிரற்படுத்தியுள்ள அரசியல் சீர்திருத்தப் பணிகளுள் தலையாயது.

### நாவலரின் முற்றுப்பெறாத பணிகள்

மேலே நிரற்படுத்தப்பட்ட நாவலர் பணிகளுள் முதல் எட்டு வகைப்பணிகளும் நாவலர் தனித்து நின்று சாதித்தவை. ஒன்பது, பத்து, பதினோராவது வகைப் பணிகள் மக்களைத் தம்முடன் பங்கு பற்றச் செய்ததன் மூலம் சாதித்தவை. பன்னிரண்டு முதல் பதினைந்து வரை நிரற்படுத்தியுள்ள பணிகள் மக்களது பங்களிப்புடன் நிறைவேற்றத் திட்டமிடப்பட்டு ஓரளவு வெற்றிகண்ட ஆனால் முற்றுப்பெறாதனவும் கால்கோள் பெறாதனவுமான பணிகள். இவற்றை சிறிது விரிவாக நோக்குவோம்.

### சைவப் பாடசாலைகள் நிறுவும் பணி

சைவசமயப் பிள்ளைகள் புறச்சமயச் சார்பான பாடசாலைகளில் கல்விபெறுவதால் ஏற்படும் தீமைகளை உணர்ந்த நாவலர் அச்சூழலை மாற்றத் துணிந்தார். 1846 ஆம் ஆண்டில் தமது வீட்டின் புறத்திண்ணையில் பள்ளிக்கூடம் ஒன்றை நிறுவினார். பின்னர் 1849 ஆம் ஆண்டில் ஆறுமுகம் செட்டியார் (என்னே பெயர்ப் பொருத்தம்) என்பவரால் உபகரிக்கப்பட்ட காணியில் ஒரு வித்தியாசாலையைக் கட்டி 1851 ஆம் ஆண்டு தை மாதம் முதல் நடத்தி வந்தார். வண்ணார்பண்ணை சைவப் பிரகாச வித்தியாசாலை என அழைக்கப்பட்ட இப்பாடசாலையில் இலவசக்கல்வி, உணவு, புத்தகங்கள் வழங்கப்பட்டன. இவ்வித்தியாசாலை ஏனைய தமிழ் பாடசாலைகளுக்கு முன்னோடியாகத் திகழ்ந்தது.

1852 ஆம் ஆண்டில் தம் பாடசாலைக்கு ஏனைய மிசனறிப் பாடசாலைக்கு அளிப்பது போல உதவிப் பணம் அளிக்குமாறு சேர் வில்லியம் அன்டர்சன் (Sir William Anderson) என்னும் தேசாதிபதிக்குக் கற்றோர் உள்ளம் நெகிழக் கூடிய விண்ணப்பம் ஒன்றினை எழுதினார். இவ்வாண்டில் நாவலரது வித்தியாசாலையில் 189 மாணாக்கர் கற்றனர். இவரின் விண்ணப்பத்திற்கு அரசினர் இரங்கவில்லை இதற்குக் காரணம் நாவலர் தமது விண்ணப்பத்தில் தமது சமய நோக்கக் கல்வி முறையினை எள்ளளவும் அரசாங்கப் பரிசோதகர், பாடசாலை ஆணைக்குழு உறுப்பினர்கள் ஆகியோரின் விருப்பத்திற்கு இசைய மாற்றியமைக்கத் தயாரில்லை எனக் குறிப்பிட்டமையே. உவோல்றர் செந்தால் (Walter J. Sendall) முதலிய கல்வி இயக்குநர்கள் நாவலரின் பாடசாலை நடக்கும் முறையினைத் தம் அறிக்கைகளில் எள்ளி நகையாடிக் குறிப்பிட்டிருந்தனர். அதனால் நாவலர் உள்ளம் தளரவில்லை. 1870 ஆம் ஆண்டு வரை அரசாங்க உதவிப் பணம் இப்பாடசாலைக்கு வழங்கப் படவில்லை. இருபது வருடங்கள் அரசினர் உதவியின்றி பொதுமக்கள் உதவிய அற்ப பொருளுதவியுடன் இப்பாடசாலையை நடத்திய திறமை வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்தது. 1864 ஆம் ஆண்டு யாழ்ப்பாண மக்கள் உபகரித்த பொருளுடன் சிதம்பரத்திலும் சைவப்பிரகாச வித்தியாசாலை யொன்றை நாவலர் நிறுவினார். மூன்றாவது பாடசாலையை 1870 ஆம் ஆண்டு கோப்பாயில் ஆரம்பித்தார்.

யாழ்ப்பாணத்தில் சைவக்கல்வியை மீள உயிர்ப்பித்து அங்கு சைவக்கல்வி இயக்கத்தின் ஸ்தாபகராக விளங்கியவர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் அவர்களே. அக்கால கட்டத்தில் சைவமக்களை மேனிலைப்படுத்தும் ஒவ்வொரு இயக்கத்துக்கும் முன்னிலை வகித்தவர். அவரே யாழ்ப்பாணத்தில் சைவப்பாடசாலைகளை ஆரம்பிக்குமாறு அவர் மக்களைத் தூண்டினார். அதன் விளைவாகக் கொழும்புத்துறை, கந்தர்மடம், பருத்தித்துறை, மாதகல், உடுவில், வேலணை மற்றும் பல இடங்களில் சைவப்பிரகாச வித்தியாசாலைகள் உதயமாகின. இவையும் பல வருடங்கள் அரசாங்க உதவிப் பணம் எதுவுமின்றியே நடத்தப்பட்டன.

இவ்வாறான சூழ்நிலையில் நாவலர் அவர்கள் சட்ட நிரூபணசபை அங்கத்தவராக விருந்த சேர். முத்துக் குமாரசுவாமி அவர்கள் மூலம் சட்ட நிரூபணசபையில் பின்வரும் தீர்மானம் வெற்றிகரமாக நிறைவேற்றத் தூண்டுகோலாகவிருந்தார்.

''இந்நாட்டின் கல்வி நிலை பற்றியும் கல்வித் திட்டங்கள் பற்றியும் விசாரணை செய்ய ஒரு குழு நியமிக்கப்பட வேண்டும். அக்குழு, தற்போதைய கல்வி முறைச் செயற்பாடுகள். எவ்வளவு தூரம் வெற்றியளித்திருக்கிறது என்பதையும் கல்வி முறையில் ஏற்படுத்தப் படக் கூடிய முன்னேற்றங்கள் பற்றியும் விசாரணை செய்ய வேண்டும்''

(12ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அமரர் கார்த்திகேசு மாணிக்கவாசகர்

## மக்கள் மனங்கவர்ந்த அரசாங்க அதிபர்

யாழ்ப்பாண முன்னாள் அரசாங்க அதிபர் திரு. கார்த்திகேசு மாணிக்கவாசகர் அவர்கள் கடந்த ஆகஸ்ட் மாதம் இருபத்தியிரண்டாம் நாள் அமரத்துவமடைந்தார் என்ற செய்தி யாழ் குடாநாட்டின் சகல நிலைகளிலுமுள்ள மக்களையும் துயரத்தில் ஆழ்த்தியது. சமீபகால வரலாற்றில் யாழ்ப்பாண மக்களின் பேரன்பைப் பெற்றிருந்த அரசாங்க அதிபர்களுள் முதன்மையானவர் அமரர் மாணிக்கவாசகர் என்றால் அது மிகையாகாது. ஏழை பணக்காரன் என்ற பேதமின்றி எல்லா மக்களுடனும் அன்பாகப் பழகி, அவர்களது தேவைகளை அனுதாபத்துடன் கேட்டறிந்து செய்யக் கூடிய உதவிகளைச் சலிக்காது செய்து கொடுத்து மக்கள் மனம் கவர்ந்த மாணிக்கமாகத் திரு. மாணிக்கவாசகர் விளங்கினார்.

நிறைந்த கடவுள் பக்தியும் நிருவாகத் திறமையும் கொண்ட அமரர் மாணிக்கவாசகர் அவர்கள் யாழ்ப்பாண உதவி அரசாங்க அதிபராகச் சேவையாற்றிய காலத்திலும் யாழ் மாவட்ட அரசாங்க அதிபராகச் சேவையாற்றிய காலத்திலும் சமய வளர்ச்சி சம்பந்தப்பட்ட விடயங்களிலும் ஆலயங்களின் தேவைகளை நிறைவு செய்வதிலும் பெரும் அக்கறை காட்டினார்

1992 ஆம் ஆண்டளவில் இராணுவ நடவடிக்கைகள் காரணமாக யாழ்ப்பாண மக்கள் தம்மை விட்டுப் பிரிந்த தம் அன்புக்குரியவர்களுக்குக் கீரிமலை சென்று அந்தியேட்டி முதலிய நீத்தார் கடனாற்ற முடியாத நிலையேற்பட்டது. அப்போது கீரிமலையைப் போலப் புனிதமானதும் 1970 களிலிருந்து பல்வேறு இடையூறுகள் காரணமாகப் பாவனையிலிருந்து நிறுத்தி வைக்கப் பட்டிருந்ததுமான வில்லூன்றி புனித தீர்த்தத்தைத் துப்புரவு செய்து மீண்டும் மக்கள் பாவனைக்கு ஏற்றதாகப் புனரமைப்பதற்குப் பெரும் உறுதுணையாக விருந்தார் யாழ்ப்பாணத்துக்குப் பொருட்களைக் கொண்டு வருவதில் பல கட்டுப்பாடுகள் இருந்த அச் சமயத்தில் வில்லூன்றி புனித தீர்த்தத்தைத் துப்புரவு செய்யப் பாரிய நீரிறைக்கும் யந்திரங்களைக் கொண்டு வர உதவிகள் புரிந்தார்.

ஆடி அமாவாசை, சித்திரா பூரணை போன்ற தினங்களில், யாழ்ப்பாணத்தில் இருப்பாரேயானால் அவர் வில்லூன்றிக்கு வருகை தந்து மக்களோடு மக்களாகப் புனித தீர்த்தத்தில் தீர்த்தமாடி நீத்தார் கடனாற்றத் தவறுவதில்லை. வில்லூன்றி புனித தீர்த்த வீதிக்குத் தார் ஊற்றிச் செப்பனிட 1994 ஆம் ஆண்டு பன்முகப் படுத்தப்பட்ட வரவு செலவுத் திட்ட ஒதுக்கீட்டிலிருந்து ஒன்றேகால் இலட்ச ரூபா ஒதுக்கி உதவினார். இது போலவே பல்வேறு சமய வளர்ச்சிப் பணிகளுக்குத் தம்மாலான உதவிகளைச் செய்தார்.

மானிப்பாயில் 1934 ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் பிறந்த திரு மாணிக்கவாசகர் அவர்கள் எழுதுவினைஞராக அரச சேவையில் இணைந்து சுய முயற்சியால் இலங்கை நிர்வாக சேவைப் பரீட்சையில் சித்தியெய்தி, உதவி அரசாங்க அதிபராக நியமனமானார் மன்னார், தம்பலகாமம், கரவெட்டி, கோப்பாய், யாழ்ப்பாணம் ஆகிய பிரிவுகளில் உதவி அரசாங்க அதிபராகவும் சிறிது காலம் யாழ் செயலகத்தில் திட்டமிடல் பணிப்பாளராகவும் சேவையாற்றினார். 1989 நவம்பர் முதல் நான்கு மாதங்கள் யாழ். மாவட்ட அரசாங்க அதிபராகவும் 1990 மார்ச் முதல் 1991 மே வரை கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபராகவும் இறுதியாக 1991 மே முதல் 1994 நவம்பர் மாதத்தில் ஓய்வு பெறும் வரை யாழ் மாவட்ட அரசாங்க அதிபராகவும் பெரும் பணியாற்றினார். இக்கால கட்டத்தில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் பேரவையின் நியமன அங்கத்தவராகப் பல்கலைக்கழக மானிய ஆணைக்குழுவினால் நியமிக்கப் பட்டிருந்தார்

மானிப்பாய் மருதடி விநாயகரிலும் வேலக்கைப் பிள்ளையாரிலும் மிகுந்த பக்தி கொண்டிருந்த திரு. மாணிக்கவாசகர் அவர்கள் அங்கு பல பணிகள் ஆற்றியுள்ளார்

வையத்துள் வாழ்வாங்கு வாழ்ந்து வானுறையும் தெய்வத்துள் வைக்கப்பட்ட திரு. மாணிக்கவாசகரது ஆன்மா நடராசப் பெருமானது குஞ்சிதபாத நீழலில் என்றுமின்பம் பெருகச் சாந்தியுறப் பிரார்த்திக்கிறோம்.

— ஆசிரியர்

---

19-11-2000 ஆம் ஆண்டு நடைபெறவிருக்கும் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலரின் 121 வது குருபூசையின சார்பாக சைவபரிபாலன சபையாரால 12-11-2000 இல் நடத்தப் பெற்ற நாவன்மைப் போட்டி, கட்டுரைப் போட்டிகளில்

## பரிசு பெறுவோர் விபரம்

### 1. நாவன்மைப் போட்டி:

கீழ்ப்பிரிவு

செல்வி க. கலையரசி
யா/புனித திரேசாள் மகளிர் கல்லூரி — 1ம் பரிசு
செல்வி வை. மீரா
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி — 2ம் பரிசு
செல்வி ம. லோகபரணி
யா/மகாஜனக் கல்லூரி — 3ம் பரிசு

மத்தியபிரிவு

செல்வன் ம. அன்பரசன்
யா/இந்துக் கல்லூரி — 1ம் பரிசு
செல்வி க. கலையரசி
யா/ஸ்கந்தவரோதயாக் கல்லூரி — 2ம் பரிசு
செல்வி இ. சோபனா
யா/மாதகல் சென்யோசப் ம. வி. — 3ம் பரிசு

மேற்பிரிவு

செல்வி ப. சசிகலா
யா/கொக்குவில் இந்துக் கல்லூரி — 1ம் பரிசு
செல்வன் இ. சர்வேஸ்வரா
யா/இந்துக் கல்லூரி — 2ம் பரிசு
செல்வி இ. சிவஜோதி
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி — 3ம் பரிசு

### 2. கட்டுரைப் போட்டி:

செல்வி கிரிசாம்பாள் வேலாயுதபிள்ளை
யா/வேம்படி மகளிர் கல்லூரி — 1ம் பரிசு
செல்வன் இரத்தினசிங்கம் - சர்வேஸ்வரா
யா/இந்துக்கல்லூரி — 2ம் பரிசு
செல்வி ஜெயகௌரி - ஜெயரட்ணம்
யா/சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி — 3ம் பரிசு

முதலாம், இரண்டாம், மூன்றாம் பரிசுகளாக முறையே தங்கப்பதக்கம், வெள்ளிப்பதக்கம், வெண்கலப்பதக்கம் வழங்கப்படும்.

(11 ஆம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சேர். பொன். இராமநாதன் நினைவு தினம்: 01-12-2000:

# சேர். பொன். இராமநாதன் - ஒரு கர்மயோகி

## அவர் வாழ்வில் ஏற்பட்ட திருப்புமுனையின் பின்னணி

தமது எண்பது (1851-04-16 - 1930-11-26) ஆண்டு கால இவ்வுலக வாழ்வின் பின்னரைப் பகுதியில் சேர். பொன். இராமநாதன் அவர்கள் ஒரு இல்லற ஞானியாக, கர்மயோகியாக வாழ்ந்தார். சேர் பொன். இராமநாதனில் ஏற்பட்ட சமய மனவெழுச்சி அவரது தந்தையாரிடமிருந்து - முன்னோர்களிடமிருந்து - சுவீகரித்துக் கொள்ளப்பட்டது எனலாம்.

### தந்தை அளித்த பயிற்சி:

அர்ப்பணிப்பும் ஆவலுமுள்ள ஒரு தந்தையாக விளங்கிய பொன்னம்பல முதலியார் தமது பிள்ளைகளுக்கு, மனதில் இலகுவில் பதியக்கூடிய வயதில், சிறந்த சமயக் கல்வியும் சமயப் பயிற்சியும் அளித்ததுடன் முன்மாதிரியானவொரு சமய வாழ்வு வாழ்ந்து காட்டினார். இவை இராமநாதன் சகோதரர்களுக்கு அவர்கள் வாழ்நாள் முழுவதும் ஒரு அழிவற்ற சொத்தாக நிலைத்ததுடன் தமது பிற்காலத்தில் தமது சமயத்தை நன்கு கற்றுப் புலமை பெறவும் இதர சமயங்களையும் தத்துவங்களையும் ஒப்பிட்டுக் கற்கவும் உந்து சக்தியாக அமைந்தன.

### சமய மனவெழுச்சி:

இராமநாதரது அடிமனதிலே அமைதியாகவிருந்த சமய மனவெழுச்சி, நாற்பது வயதைக் கடந்தபின் அலையாக மாறி அவரை அள்ளிச்சென்றது. அவ்வலையை ஆத்மீகப் பசியைத் தணிக்கும் முயற்சியாக இராமநாதன் அவர்கள் கீழ்நாட்டு, மேல்நாட்டு புனித நூல்களைப் பெருவிருப்போடு படித்ததுடன் அவற்றில் பொதிந்துள்ள தூய, அழிவற்ற உண்மைகளைக் கண்டறியும் தீவிர ஆராய்ச்சியிலும் சிந்தனையிலும் நீண்ட நேரங்களைச் செலவிட்டார். வேதங்கள், ஆகமங்களிலும் பைபிளிலும் குரானிலும் - சுருக்கமாகக் கூறுவதாயின் மனித குலத்துக்கு அதன் முன்னோர் விட்டுச்சென்ற ஆன்மீக முதுசங்கள் அனைத்திலும் - அவர் ஆழமாகக் குடைந்து சென்றார். வடமொழி இலக்கியங்கள் விலைமதிப்பற்ற, வற்றாத ஆத்மீகஞானத் தடாகமாகக் காணப்பட்டது. இராமநாதன் இந்து மெய்யியலின் முழுப்பரப்பளவையும் நுட்பமாகப் பரிசோதித்து ஆழம் பார்த்தார். இந்நிலையில் இராமநாதரின் ஆத்மீக நியமத்தை வளர்த்தெடுப்பதில் பெருஞ்செல்வாக்குச் செலுத்தப்போகும் ஒருவர் இராமநாதரை வந்தடைந்தார்.

### சமயகுருவின் வருகை:

கொழும்பில் அமைந்திருந்த சுகஸ்தான் என்ற இராமநாதரின் இல்லத்திற்கு அவரது ஆன்மீகப் பிரசவ வேதனையின்போது எவ்வாறானவொரு குரு தேவைப்படுவாரோ அவ்வாறானவொருவர் - உண்மையான ஆன்மீக ஞானமும் அறிவுக்கூர்மையும் உடைய ஆன்மீக போதகர் - பண்பாடு, கல்வி, ஒழுக்கம், பழக்கவழக்கங்களில் சிறந்த கனவான் - கால்டி எடுத்து வைத்தார்.

அந்த அறிமுகமில்லாத விருந்தாளி வேறுயாருமல்ல. வருங்காலத்தில் இராமநாதரது மருமகனாகப் போகும் திரு. சு. நடேசபிள்ளை அவர்களின் பேரனாராகிய தஞ்சாவூரைச் சேர்ந்த அருள்பரானந்த சுவாமிகள் தான் அந்த விருந்தாளி.

தனது குலத்துக்குரிய தனித்துவமான ஆடை அணிந்திருந்த சுவாமிகள், அந்தஸ்தும் செல்வவளமும் உள்ளவொருவிடத்தில் வழமையாகக் காணப்படும் ஆடம்பரத்திற்கும் பகட்டுக்கும் மத்தியில், மேற்கத்திய உலகாயத வாழ்க்கை முறையில் தோய்ந்து போய் இராசபோக வாழ்வு வாழ்ந்துகொண்டிருந்த இராமநாதருடைய விலையுயர்ந்த நிலவிரிப்புகளைக் கொண்ட அரண்மனை போன்ற சுகஸ்தான் இல்லத்தில் தமது காலணியற்ற பாதங்களைப் பதித்து மிடுக்கான பார்வையுடன் இராமநாதன் முன் தோன்றினார்.

### முதற் சந்திப்பு:

இவ்விருந்தினரின் வருகை இராமநாதருக்கு விழுங்கிக் கொள்ள முடியாதவொரு கசப்பான மாத்திரை போன்றிருந்தது. இராமநாதர், வந்தவரை அதிகாரப் பாங்கான குரலில் ''நீர் யார்? எனது இல்லத்திற்கு வர உமக்குத் துணிவு வந்தது எப்படி?'' எனக்கேட்டார். அந்த ஞானி மிடுக்கானதும் அதிகாரப்பாங்கானதும் கட்டளையிடுகின்றதுமான சொற்களில், நாவை அடக்கும்படி கூறி, ''நான் உம்மைச் சீர்திருத்த வந்துள்ளேன்'' என்றார். இராமநாதன் அவரைக் கடைக்கண்ணால் பார்த்தார். நயனதீட்சை ஆகிவிட்டது. பார்த்த போது, விருந்தினரின் பார்வையும், தோற்றமும், ஆசாரமும் அவர்மீது ஒரு பயபக்தியையும், மரியாதையையும் உந்துகின்ற ஏதோவொன்றைக் கண்டார்.

இராமநாதன் எந்தவொரு குருவுக்காக ஏங்கிக் கொண்டிருந்தாரோ அந்தக் குருவை இந்த விருந்தாளியில் கண்டார். தனது தகப்பனார் தாம் சிறுவனாக இருந்தபோது இந்தியாவிலுள்ள இந்து புனித தலங்களுக்குத் தம்மை யாத்திரையாக அழைத்துச் சென்றிருந்தபோது கூறிய வார்த்தைகள் ஞாபகத்திற்கு வந்தன:

''ஆன்ம விளக்கம் பெறுவதற்குள்ள பல வழிகளில் ஆலய வழிபாடும் ஒன்று. இறுதித் தெளிவை - ஞானோதயத்தை - ஒரு குருவானவரின் உதவியுடனேயே பெற முடியும்''

குற்ற உணர்வு மீறி எழத் தனது இறுமாப்பிற்கும் நிந்தனைக்கும் தன்னைப் பொறுத்துக் கொள்ளுமாறு கணணீர்மல்க மன்றாடினார் இராமநாதன்.

சுவாமிகளின் வருகை இராமநாதரின் வாழ்க்கையில் ஒரு புதிய பாதையைத் திறந்து விட்டது. அவர் வேகமாக அமிழ்ந்திக் கொண்டிருக்கும் புலன்வழிப்பட்ட உலோகாயதத்திலிருந்து அவரை இழுத்துக் கரை சேர்த்துப் பக்தியிலும் ஆன்மீக முயற்சியிலும் உறுதியாக நிலைப்படுத்தும் நோக்குடனேயே சுவாமிகளை இறைவன் அனுப்பிவைத்தார் போலும்.

### ஆர்வமிக்க சீடராதல்:

சுவாமிகளுடனான இம்முதற் சந்திப்பிலேயே இராமநாதன், சுவாமிகளின் ஆர்வமிக்க சீடரானார். அது

(10ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உ



திருச்சிற்றம்பலம்

வாழ்க அந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

திருச்சிற்றம்பலம்


# இந்துசாதனம்

விக்கிரம ஹு ஐப்பசி மீ 26 உ (11-11-2000)


# நாவலர் நல்லாசி

இம்மாதம் மகநட்சத்திரத்தன்று நாவலர் பெருமானது குருபூசையைச் சைவமக்கள் பக்தி சிரத்தையோடு அனுட்டிக்கின்றனர்.

"இக்காலத்தில் ஆறுமுக நாவலர் என்ற திருநாமம் சைவ உலகில் மிக உன்னத நிலையில் வைத்துப் போற்றப்படுகிறது. சைவசாதனைகள் பற்றி எதிரிடையான கருத்துக் கொண்டவர்களும் நாவலர் நல்வாக்குகளை - அவை தமது வாதத்துக்குப் பொருத்தமற்றனவாக இருப்பினும் - தமது அபிப்பிராயங்களுக்கு உறுதுணையாக இருக்க வேண்டுமென்பதற்காக மேற்கோள் காட்டப் போட்டி போடுகின்றனர். ஆனால் இவர்களில் அநேகர் நாவலரின் மேன்மை மிகு வாழ்க்கை பற்றி மிகச் சிறிதளவே அறிந்துள்ளனர்."

இது சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம் பிள்ளை அவர்கள் 1950 ஆம் ஆண்டில் ஆங்கிலத்தில் எழுதி வெளியிட்ட ஆறுமுக நாவலர் என்ற நூலுக்கு எழுதியமுகவுரையின் ஒரு பகுதி.

ஐம்பது ஆண்டுகளின் பின், இன்றும் சைவப்பெரியாரின் கூற்று உண்மையாகவே இருக்கிறது. இன்றைய ஜனரஞ்சக மேடைப் பேச்சாளர்கள், சைவசமயம் கற்பிக்கும் ஆசிரியர்கள், சைவசமய நிறுவனங்களின் நிருவாகிகள் போன்றோரில் எத்தனை விகிதத்தினர் நாவலரின் பிரமிக்கத்தக்கவளவினதும் பலவேறு வகைப்பட்டதுமான - ஐம்பத்தேழு ஆண்டுகால குறுகிய வாழ்நாளில் நிறைவேற்றப்பட்ட - பணிகளை அறிந்துள்ளனர் என்பது கேள்விக் குறியாகவே உள்ளது. இது காரணமாகவே இந்து சாதனம் சென்ற இதழின் பெரும் பகுதியை - மேலதிக பக்கங்களுடன் - நாவலரின் வரலாற்றுக் குறிப்புகளைப் பிரசுரிப்பதற்கு ஒதுக்கியிருந்தான்.

நாவலர் பெருமானின் பெருமை மிக்க வாழ்வையும் செயற்பாடுகளையும் எமது இளந்தலைமுறையினர் வாசித்தறிந்து கொள்ள ஊக்குவிப்பது எமது கடமையாகும். அவ்வாறு வாசிக்க வைப்பது அவர்களை நல்ல குறிக்கோள்களுக்காகச் செயற்பட ஊக்குவிக்கும். நாவலரது வாழ்க்கைக் குறிப்புகள் ஒவ்வொரு சைவ மாணாக்கரின் கரங்களையும் சென்றடைவது நன்மை பயக்கும்.

நாவலர் பணிகள் ஒப்புயர்வற்றன. அவரைப் போன்றவொரு பணியாளனைச் சைவ உலகம் பல நூற்றாண்டுகளாகக் கண்டதில்லை.

ஊதியம் பெறாதவொரு ஆசிரியராக, பாடசாலைகளின் ஸ்தாபகராக, நிருவாகியாக, அச்சியந்திர சாலைகளின் சொந்தக்காரராக, நூல் வெளியீட்டாளராக, நூல் உரையாசிரியராக, வியாக்கியானஞ் செய்பவராக, பதிப்பாசிரியராக, மொழி பெயர்ப்பாளராக, கவிஞராக, கிடைத்தற்கரிய ஓலைச் சுவடிகளைத் தேடிச் சேர்ப்பவராக, பேச்சாளராக, கண்டன எழுத்தாளராக, துண்டுப்பிரசுர (சிறு நூல்) எழுத்தாளராக, பாடநூல் எழுத்தாளராக, நிதியுதவிக்கு விண்ணப்பம் செய்வோனாக, தொற்றுநோய், பஞ்ச காலங்களில் சக மனிதர்களின் துன்பங்களை நீக்குபவராக, மனுக்கள் மூலம் மக்கள் குறைகளை அரசினருக்கு அறியச் செய்பவராக, பொதுக் கூட்டங்கள் விவாதங்களை ஒழுங்கு செய்பவராக, சமூக, சமய, அரசியல் சீர்திருத்த வாதியாக, வழக்காளியாக நாவலர் ஆற்றிய பணிகள் பல.

நாவலர் சாதித்தவை பல. அச்சாதனைகளை மெச்சிப் போற்றி நினைவுகூர்ந்து விழாவெடுக்கும் இன்றைய சமூகம், அவரின் குறிக்கோள்களை - அபிலாசைகளை - நிறைவு செய்ய என்ன செய்கிறது?

ஒரு சில புலமையாளர்களின் வீடுகளில் ஓலைச் சுவடிகளில் முடங்கிக் கிடந்த சைவத்தமிழ்ப் பொக்கிஷங்களை அரிதிற் சேகரித்துப் பிழை திருத்தி அச்சு வாகனமேற்றி அவை அழிந்து போகாமற் காப்பாற்றியதுடன் ஒரு சிறு தொகையினரின் ஏகபோகமாயிருந்த இப்பொக்கிஷங்களை முழுச்சமுதாயத்துக்கும் சென்றடையச் செய்து அறிவுக்கண் திறந்தவர் ஆறுமுகநாவலர். அச்சுயந்திரம் முதன் முதலாக இந்நாட்டில் அறிமுகமாகியிருந்த -வளர்ச்சிகாணாத- ஒரு கால கட்டத்தில் போக்குவரத்து வசதிகள், தொடர்புசாதன வசதிகள் அற்ற சூழ்நிலையில் இப்பணியை நாவலர் வெற்றிகரமாக நிறைவேற்றினார்.

## இன்றைய நிலை?

நவீன அச்சிடும் வசதிகள், போக்குவரத்து வசதிகள், தொலைத்தொடர்பு வசதிகள், அரிய நூல்களை நுண்படப்பிரதி எடுத்து வைத்து வேண்டியபோது வாசித்துக் கொள்ளக் கூடிய வசதிகள் யாவும் நிறைந்த இக்காலகட்டத்தில் ………,

நாவலர் காலத்திலும் அவர் பின்னும் வாழ்ந்த பெரும் புலமை வாய்த்த அறிஞர்களான வித்துவ சிரோமணி பொன்னம்பலபிள்ளை, சிவசங்கர பண்டிதர், சுவாமிநாத பண்டிதர், காசிவாசி செந்திநாதஐயர் போன்றோரின் பெறுமதி மிக்க ஆக்கங்களை நாம் இன்று பெற்றுக் கொள்ளக் கூடியதாக இருக்கிறதா?

சேர். பொன். இராமநாதனின் மிகச் சிறந்த நூல் நிலையத்துப் பொக்கிஷங்கள் பரமேஸ்வராக் கல்லூரிக்கு கொடுக்கப்பட்டன. அவற்றிற்கு என்ன நடந்தது?

ஐம்பது வருடங்களுக்கு முன் சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்

(9ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நாவலர் நல்லாசி

(8ம் பக்கத் தொடர்ச்சி)

பிள்ளையவர்கள் செய்த நூல்களைத்தானும் முழுமையாகப் பெற்றுக்கொள்வது முயற் கொம்பாக இருக்கிறது.

அதிகம் கூறவேண்டிய தில்லை. நாவலர் வழி நின்று சைவம் வளர்க்க அமைக்கப்பட்ட சைவபரிபாலன சபையாரால் கடந்த நூற்றிப்பதினொரு வருடங்களாக வெளியிடப்பட்ட இந்து சாதனம் - Hindu Organ பத்திரிகைகளை ஒழுங்கு முறையாகப் பார்வையிட வேண்டுமானால் கொழும்பு தேசிய நூலகத்துக்குப் போக வேண்டியுள்ளது.(இவற்றின் நுண்படப்பிரதிகளை அமெரிக்கா சமீபத்தில் இலங்கை வெளிவிவகார அமைச்சுக்குக் கொடுத்து அவை கொழும்பு தேசிய நூலகத்தில் வைக்கப்பட்டுள்ளன.) எந்தவொரு சைவசமய நிறுவனத்திடமும் இவை இல்லை. (யாழ்ப்பாணக் கல்லூரி நூலகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நூலகம், யாழ்ப்பாண மாநகரசபை நூல் நிலையம் ஆகிய இடங்களில் ஓரளவே இருக்கிறது).

யாழ்ப்பாணம் சைவ பரிபாலன சபை தானும் தனது வெளியீடுகளைப் பேணிப் பாதுகாத்ததா என்றால் இல்லை. சைவ பரிபாலன சபையாரின் சைவப்பிரகாச அச்சியந்திர சாலையில் அச்சுவாகனம் ஏறிய புத்தகங்களின் அட்டவணையைக் கூடத் தயாரிக்க முடியாமல் இருக்கிறோம் என்பதுவே யதார்த்தம். அக்கறையின்மையே இவற்றிற்குக் காரணம். நாவலர் வழி நிற்பவர்களால் நாவலரின் பின் ஆக்கம் பெற்ற அரிய நூல்களைப் பேணிப் பாதுகாக்க முடியாதா?

அந்நியர் ஆட்சிக் காலத்திலே மதமாற்ற முயற்சிகளைக் கண்டித்துப் பிரசாரம் செய்தார் நாவலர். இன்று சுதந்திர நாடு என்கிறோம். ஆனால் மதமாற்ற நடவடிக்கைகள் வேகமாக நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. திட்டமிடப்பட்டு நடைபெறும் மறைமுகத் தாக்கங்களால் சைவசமூகம் வலைக்குள் அகப்பட்ட மீன்களின் நிலையில் தத்தளிக்கிறது. இவ்வாறான சூழ்நிலையில் நாவலர் வழி நடக்கிறோம் என்று தம்பட்டம் அடிப்பவர்களும், தம்மைத்தாமே சைவசமயத் தலைவர்கள் என நினைத்துக்கொள்பவர்களும் மற்றவர்கள் ஏற்றுக்கொள்ள வேண்டுமென விரும்புபவர்களும் என்ன செய்துகொண்டிருக்கிறார்கள்? கண்டும் காணாதவர் போல எல்லோருக்கும் நல்லவர்களாக வாழும் கலையில் தேர்ச்சி பெற்றுக் கொண்டிருக்கிறார்கள்?

திருக்கேதீச்சரம் தேன் பொந்து என்ற நாவலர் அத்திருத்தலம் அமைந்திருந்த காணியை மீண்டும் வாங்கி அங்கு பெருங் கோவில் அமைக்கக் கனவு கண்டார். அவரது கனவை நனவாக்கச் சைவசீலர் பசுபதிச் செட்டியார், சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம்பிள்ளை, சேர். கந்தையா வைத்தியநாதன் போன்றோர் அயராது உழைத்தனர். மாபெரும் சிவாலயம் உருவாகியது. ஆனால் அந்த ஆலயத்தில் கடந்த பத்து வருடங்களுக்கு மேலாக பூசை வழிபாடுகள் இல்லை.

மடு தேவாலயம் அமைந்த பகுதி யுத்தத்தில் ஈடுபட்டிருக்கும் இருபகுதியினராலும் கைக்கும் மாறியிருக்கிறது. ஆனால் அங்கு வழிபாடுகள் தடைப்படவில்லை. அங்கு இராணுவ முகாம் அமைக்க எடுத்த முயற்சிகள் கைவிடச் செய்யப்பட்டன. இவை அம் மதத்தவர்கள் கொடுத்த அழுத்தத்தாலேயே சாத்தியமாயிற்று. இதை எம்மவர்கள் எண்ணிப் பார்த்ததில்லை. பிரதி வருடமும் மகாசிவராத்திரிக்கு ஒரு சில வாரங்களுக்கு முன் பத்திரிகைகளில் அறிக்கைகள் வரும். சந்திப்பு, பேச்சுவார்த்தை எனச் செய்திகள் வரும். மகாசிவராத்திரி முடிந்தவுடன் தூங்கி விடுகிறோம். நாவலர் வழி நடப்பவர்கள் திருக்கேதீச்சரம் பற்றி மக்களிடையே ஒரு எழுச்சியை ஏற்படுத்த முயன்றார்களா? இல்லை.

ஆலய அறங்காவலர்கள், குருமார்களுக்கு இருக்க வேண்டிய கல்வியறிவு, ஒழுக்கம், குணவியல்புகள் பற்றி நாவலர் இடித்து இடித்துச் சொல்லி வைத்துள்ளார். அவ்வுபதேசங்கள் எத்தனை பேரால் கருத்திற் கொள்ளப்படுகின்றன? சமய பரிபாலனமும் ஆலய பரிபாலனமும் சங்கக்கடை வியாபாரமாக மாறிக்கொண்டு போகிறது. யாரைக் கொண்டாயினும் நடந்ததை நடத்திக் கொண்டு போவோம் என்ற மனப் போக்குத் தான் எங்கும் காணப்படுகிறது. தராதரம், ஒழுக்கம் பற்றி எத்தனை பேருக்கு அக்கறை? ஆலய நிருவாகங்களும், சமய ஸ்தாபனங்களும் தமது ஆலயத்தில் சேவை செய்யத் தகுதி வாய்ந்த குருமாரைப் பயிற்றுவிக்க வேண்டும், எமது சமயத்தை வளர்த்தெடுக்கக் கூடிய சமயப் பிரசாரகர்களை உருவாக்க வேண்டும், அவர்கள் மூலம் சமுதாயத்தை — குறிப்பாக இளஞ் சந்ததியினரை — வழி நடத்த வேண்டும்; அது தமது சமய பரிபாலனத்தின் ஒரு அதி முக்கிய கடமை என்பதை உணருவதாக இல்லை.

இதன் விளைவுகள்?

சமூக, கலாசார, அரசியல் விடயங்கள் அனைத்திலும் வழிகாட்டிகளாக ஊக்குவிப்பாளர்களாகச் செயற்படும் தலைமைத்துவத்தை வேறு யாரிடமாயினும் கை கழுவி விட்டுப் பிறரில் தங்கி வாழும் சமூகமாக - தன்னம்பிக்கையற்ற சமூகமாக - எமது சமூகம் போய்க் கொண்டிருக்கிறது. இதனால் எமது இளஞ்சந்ததியினர் எடுப்பார் கைப்பிள்ளைகளாக யார் யாரோ காட்டும் வழியில் - வெவ்வேறு திசைகளில் – சென்று கொண்டிருக்கிறார்கள்.

நாவலர் செய்த சேவையை மகத்தான சேவையாகக் கருதுபவர்கள் - அது பற்றி மேடைகளில் முழங்குபவர்கள் - அவர் காட்டிய வழியில் சைவ சமூகத்தை எதிர்நோக்கும் பிரச்சனைகளை இனங் கண்டு - அப்பிரச்சனைகளுக்குத் துணிவுடன் முகங் கொடுத்து - எழக்கூடிய எதிர்ப்புக்களை எதிர் கொண்டு - அப்பிரச்சனைகளிலிருந்து சைவசமூகம் விடுதலை பெறும் முயற்சியில் தமது சுக நலங்களை ஓரளவாவது தியாகம் செய்ய முன் வர வேண்டும். அவ்வாறானவர்களுக்கே நாவலர் பெருமானின் நல்லாசி கிட்டும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர். பொன். இராமநாதன் - ஒரு கர்மயோகி

(7ம் பக்கத் தொடர்ச்சி)

மட்டுமன்றித் தனது சகோதரனாகிய அருணாசலம் அவர்களையும் அழைத்து அவரையும் சுவாமிகளின் சீடராக்கினார். இரு சகோதரர்களும் சமயம், மெய்யியல் ஆகிய இரண்டையும் கற்றுக் கொள்வதிலும் யோகத் தியானத்தைத் தமது விளக்கமுற்ற குருவினது வழிகாட்டுதற் கிற்ப் பயிற்சி செய்வதிலும் மிகத் தீவிரமாக ஈடுபட்டனர். இச்சகோதரர்களது மனங்களில் சமயத்தின் அடிப்படை உண்மைகளை ஆழமாக வேரூன்றச் செய்து அவர்களது ஆன்மீகத் துடிப்பை வேகமாக்கியவர் சுவாமிகளே.

### திருப்புமுனை:

மெய்யியற் சிந்தனைகளாகிய அளவிறந்த பொக்கிஷங்கள் அனைத்தும் வேத ஆகம இலக்கியங்களின் பல்வேறு கோணங்களிலான காட்சிகளும் குருவானவரின் அருட்பார்வை கிட்டியபின் அச்சகோதரர்களது அவாவுள்ள பார்வையில் விரிந்து காட்சி தந்தன. இரு சகோதரர்களது வாழ்விலும் இது ஒரு பெரும் திருப்புமுனையாக அமைந்தது. இக்காலகட்டத்தில் இராமநாதன் தமக்கு ஈடுபாடுள்ள வேறுபல விடயங்களை ஒதுக்கி வைத்துவிட்டும், மிகுந்த வருவாயைத் தந்து கொண்டிருந்த நியாயவாதித் தொழிலில் ஏற்படும் நட்டத்தையும் பொருட்படுத்தாது சமய விடயங்களைக் கற்றுக் கொள்வதிலும் பயிற்சி செய்வதிலும் தீவிரமாக ஈடுபட்டார்.

இவை காரணமாக இராமநாதனில் ஏற்பட்ட விளைவுகள் அதிசயிக்கத்தக்கன. அவருக்கு முன்னால் ஒரு புதிய உலகமே விரிந்தது. அவரது அடிவானில் ஒரு புதிய ஒளி உதயமானது. அவரில் ஒரு புதிய மாறுதல் ஏற்பட்டது. ஒரு புதிய ஆனந்தம், தெளிவு, சாந்தி, அமைதி, தன்னுள்ளே பலமும் விடுதலையும் பெற்றவொரு உணர்வு ஆகியன அவரில் ஏற்பட்டன.

உலகாயத தோற்றப்பாடுகளின் உண்மை பற்றி நம்பிக்கையின்மை, ஆன்மீகத்தின் பெறுமதிகளில் உயிர்ப்புள்ள நம்பிக்கை, புலன்வழி விடயங்களிலிருந்து படிப்படியாக விலகிச் செல்லல, ஆன்மீக வாழ்வில் அதிகளவு இலயம் ஆகியன இக்காலப் பகுதியில் இராமநாதரது குணவியல்புகளாக அமைந்தன. குருவின் அருட்பார்வை கிட்டியபின் இராமநாதரின் வாழ்வில் சமயம் பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டது. பலமணிநேரம் யோகத்தல் இருப்பார். சமய நூல்களை மிக ஆழமாகக் கற்பதில் தீவிர கவனம் செலுத்தினார்.

### சைவ சித்தாந்த விளக்கம்:

இராமநாதன் அவர்கள் சைவசித்தாந்தம் பற்றி இந்தியாவில புலமை மிக்க அவையோர் முன்னும் மேற்கு நாடுகளிலும் எடுத்துக்கூறிய வியாக்கியானமும் விளக்கங்களும் மிகவும் அபூர்வமானதாக அமைந்து இந்து மெய்யியல் சிந்தனைகளுக்குப் பெரும் பங்களிப்புச் செய்துள்ளதாக அறிஞர்களால் போற்றப்படுகிறது. இவற்றையெல்லாம் தனது குருவிடமிருந்து கற்றுக் கொண்டதாக இராமநாதன் நன்றிப் பெருக்குடன் ஒப்புக்கொண்டிருக்கிறார்.

### சுவாமிகள் சமாதியடைதல்:

இராமநாதருடன் சில ஆண்டுகள் வசித்தபின் சுவாமிகள் இந்தியா திரும்பினார். அவரது குறிக்கோள் முற்றுப்பெற்று விட்டது. அதன் பின்னர் தமது உத்தியோகக் கடமைகளிலிருந்து விடுப்புப் பெற்றுக்கொள்ளக் கூடிய போதெல்லாம் இராமநாதன் சகோதரர்கள் தஞ்சாவூர் சென்று சுவாமிகளைத் தரிசித்துச் சம்பாஷனைகள் மூலம் தமது ஆன்மீக பலத்தைப் பெருக்கிக் கொண்டனர்.

சுவாமிகள் சமாதியடைந்தபோது அவருக்கு ஒரு வழிபாட்டிடம் அமைத்து அங்கு பூசை வழிபாடுகள் ஒழுங்காக நடைபெறுவதற்கும் அவ்வழிபாட்டிடம் தொடர்ந்து பராமரிக்கப்படுவதற்கும் வேண்டியளவு அறக்கொடைகளை இராமநாதன் ஏற்படுத்தி வைத்தார்.

### எளிய வாழ்க்கையும் உயர்ந்த சிந்தனைகளும்:

வாலிபப் பருவத்தின் முற்கூறில் இராமநாதன் மேற்கத்திய நாகரிகத்தின் செல்வாக்குக்கு உட்பட்டிருந்தார். பிரபுக்களுக்குரிய விலையுயர்ந்த உணவுகளையும் குடிவகைகளையும் விரும்பினார். மேல்நாட்டுப் பகட்டான உடைகளை அணிவதில் பெருமைப்பட்டார். ஆனால் இவ்வாறான வாழ்க்கை முறை, வாலிபப்பருவத்தின் பிற்கூறில் தனது சமய குருவைச் சந்தித்தபின் முற்றாக மாறியது.

இராமநாதர் தாம் உண்பதையும் அருந்துவதையும் மிகவும் மட்டானதாகவும் இச்சையடக்கமுள்ளதாகவும் ஆக்கிக் கொண்டார். நாவிற்கு அடிமையாகவிருப்பதிலிருந்து விடுபட்டார். மீதூணைக் (அளவிறகதிகமான உணவு; பேருண்டி) கண்டு அஞ்சினார். தூய சைவ உணவை மட்டுமே உட்கொண்டார். அவரது உணவு மிக எளியதாகவும், சாதாரணமானதாகவும் அமைந்தது. ஒரு சிறு பழம், காய்கறி, ஓரளவு பால் இவையே அவரது உணவாகவும் பானமாகவும் மாறின. புலனெழுச்சிக்குச் சாதனமான மதுவகைகள், புகையிலை போன்றவற்றையெல்லாம் தவிர்த்தார். கொழும்பில் மிகச் செல்வாக்குடனும், பணபலத்துடனும் தாராளமாக உண்டு, குடித்து சுகபோக ஆடம்பர வாழ்க்கை வாழ்கின்றவர்களுடன் நெருக்கமான தொடர்புகளைக் கொண்டிருந்த போதிலும், அவ்வாழ்க்கை முறையின் ஆசை காட்டல்களுக்கு இரையாகி விடாது சாதாரண இச்சையடக்கமான சிக்கன வாழ்வு வாழத் தலைப்பட்டார்.

### கர்மயோகி:

வெளித்தோற்றத்தில் இவ்வுலக வாழ்வு வாழ்பவராகத் தோற்றமளித்த போதிலும், மனதால் அவர் ஒரு ஞானியாகவே வாழ்ந்தார். இராமநாதரின் மகிமைகளுள் ஒன்று அவர் சுறுசுறுப்பும் ஆர்வமுமிக்கவொரு உலக வாழ்வையும் உலக பந்த பாசங்களிலிருந்து பிரிந்திருக்கும் உண்மையான ஆன்மீக விடுதலையையும் இணைத்துக் கர்மயோகி என இந்துசமயம் விதந்துரைக்கும் ஒப்புயர்வற்ற வாழ்க்கை முறையின் இலட்சிய புருஷராக வாழ்ந்து காட்டியமையாகும். அவர் - அருவருக்கத்

(11 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சேர். பொன். இராமநாதன் - ஒரு கர்மயோகி

(10 ம் பக்கத் தொடர்ச்சி)

தக்க தொற்றுநோய் போன்ற - உலகாயத, புலன்வழி செல்கின்ற உலகிலிருந்து தப்புவதற்காக, பதவிக்கும், உத்தியோகத்திற்குமுரிய அலங்காரங்களையும் உடைகளையும் தூக்கியெறிந்து விட்டு சந்நியாசிக்குரிய காவியுடையை அணிந்துகொள்ளவில்லை. அவர் இந்த உலகில், அதன் இன்பங்களுக்கும் மடமைகளுக்கும் களியாட்டங்களுக்கும் மத்தியில் வாழ்ந்துகொண்டு, அதேவேளை அவற்றின் பிடியில் அகப்பட்டு அமிழ்ந்தி விடாமல் வாழ்ந்து காட்டிய கர்மயோகி.

இராமநாதனின் வாழ்க்கை முறையை நெருக்கமாக அவதானித்தவர்கள் 'பழைய' இராமநாதன் 'புதிய' இராமநாதனாக மாற்றமடைந்தது ஏறத்தாழ 1895 ஆம் ஆண்டளவில் — நாற்பத்து நான்காவது வயதளவில் — எனக் கூறியுள்ளனர். இராமநாதனது வாழ்க்கை சமயம் என்ற அச்சாணியில் நகர்ந்தது. சமயம் அவரது வாழ்வு எனவும் அவரது வாழ்வுதான் சமயம் எனவும் கூறுவர்.

''பரமேஸ்வரன் எல்லாம் செய்வார்'', ''எல்லாம் பரமேஸ்வரனினுடையது'' என்பது ''புதிய'' இராமநாதனின் தாரகமந்திரமாயிற்று. அவரிடம் குவிந்திருந்த செல்வவளமெல்லாம் யாழ்ப்பாணத்தில் இருபெருங் கல்விச்சாலைகள் உருவாகவும் தமது தந்தையார் கட்டிய பொன்னம்பலவாணேசர் ஆலயத்தைக் கருங்கற் திருப்பணியாகப புதுக்கிக் கட்டி முடிக்கவும், அந்நிறுவனங்கள் என்றும் நிலைத்து நிற்கக்கூடியதாகப் பெருமளவு அறக்கொடைகளையும் ஏற்படுத்தவும் செலவிடப்பட்டன. தனக்கென வாழாது, சைவம் வளரவேண்டும், தமிழ்க் கலாசாரம் வளரவேண்டும், ஒவ்வொரு சைவப் பிள்ளையும் சமயத்தோடிணைந்த கல்விகற்று முன்னேற வேண்டும் என்ற பரந்த குறிக்கோளுடன் மக்களில் பரமேஸ்வரனைக் கண்டு, தனது சொந்த இருப்பிடமான சுகஸ்தானையே ஐம்பதாயிரம் ரூபாவுக்கு (அக்காலத்தில்) ஈடுவைத்து செலவு செய்யுமளவுக்கு, செயற்பட வைத்தது. இந்தப் 'புதிய' இராமநாதனே எக்காலத்திலும் மறக்கப்பட முடியாத ஒரு நிரந்தர இடத்தை யாழ்ப்பாணத்துச் சைவத் தமிழ் மக்கள் மனதில் பெற்றுக்கொண்டார்.

## பரிசு பெறுவோர் விபரம்

(6 ம் பக்கத் தொடர்ச்சி)

### நாவன்மைப் போட்டி ஆறுதல் பரிசு:

மேற்பிரிவு

செல்வன் கோ, கோகிலதரன் (புற்றளை மகா வித்தியாலயம்), செல்வன் செ. கவிதரன் (ஸ்கந்தவரோதயக் கல்லூரி), செல்வன் அ. சுதன் (அருணோதயக் கல்லூரி). செல்வி இ. நிருஜா (மகாஜனக் கல்லூரி), செல்வி அ. மேரிறொபினா (ஞானாசாரியார் கல்லூரி), செல்வன் யோ. தினேஸ்குமார் (ஹாட்லிக் கல்லூரி), செல்வன் த. பிரபாகரன் (விக்ரோறியாக் கல்லூரி), செல்வி இ. பாருணி (வேம்படி மகளிர்கல்லூரி).

மத்தியபிரிவு

செல்வி ஞா. பிரமிளா (சுண்டுக்குளி மகளிர் கல்லூரி), செல்வி ச. சுகன்டியா (விக்ரோறியாக் கல்லூரி), செல்வி ம. சுபாஷினி (பெரியபுலம் மகாவித்தியாலயம், செல்வி து. கார்த்திகாயினி (அச்சுவேலி மகாவித்தியாலயம்), செல்வன் து ஐங்கரன் (சாவகச்சேரி இந்துக் கல்லூரி), செல்வி இ. கோகிலா (இராமநாதன் கல்லூரி), செல்வன் இ. சிவகுமார் (சண்டிலிப்பாய் இந்துக் கல்லூரி).

கீழ்ப்பிரிவு

செல்வி. இ. லாவண்யா (அருணோதயாக் கல்லூரி), செல்வன் உ. ருஜத் (சுதுமலை சிம்மய பாரதி வித்தியாலயம்), செல்வி தெ. துஷ்யந்தி (உடுப்பிட்டி மகளிர் கல்லூரி), செல்வன் க. யோகேஸ்வரன் (நெடுந்தீவு மகாவித்தியாலயம்), செல்வி ம. மயூரா (வேம்படி மகளிர் கல்லூரி), செல்வன் தெ. ஹர்சன் (மத்திய கல்லூரி), செல்வன் ந. நவராஜகுமார் (இந்துக்கல்லூரி).

### கட்டுரைப் போட்டி ஆறுதல் பரிசு:

செல்வி கு. றதிகலா (மானிப்பாய் மகளிர் கல்லூரி), செல்வி செ. தர்சிகா (கொக்குவில் இந்துக்கல்லூரி), செல்வி இ. கிரிசாந்தி (இந்து மகளிர் கல்லூரி), செல்வன் சி. றமணராசா (சங்கானை சிவப்பிரகாச மகாவித்தியாலயம்), செல்வன் கோ. கோகிலதரன் (புற்றளை மகாவித்தியாலயம்), செல்வி த. நித்தியவாணி (அச்சுவேலி மகா வித்தியாலயம்), செல்வன் கோ. சசிக்குமார் (மானிப்பாய் இந்துக்கல்லூரி). செல்வி சு. சத்தியா (இராமநாதன் கல்லூரி), செல்வி க. கௌசலா (யா/செங்குந்தா இந்துக்கல்லூரி), செல்வி த. வசந்தகுமாரி (உடுவில் மகளிர் கல்லூரி).

உ

## சைவசமயப் பெருநாள்கள்

### (ஐப்பசிப் பூரணை முதல் கார்த்திகைப் பூரணை வரை)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| ஐப்பசி | 26 | உ | (11-11-2000) | சனி | பூரணை விரதம், ஐப்பசிப் பரணி |
| | 27 | உ | (12-11-2000) | ஞாயிறு | கார்த்திகை விரதம் |
| | 30 | உ | (15-11-2000) | புதன் | சங்கடஹர சதுர்த்தி |
| கார்த்திகை | 01 | உ | (16-11-2000) | வியாழன் | கார்த்திகை மாதப்பிறப்பு |
| | 04 | உ | (19-11-2000) | ஞாயிறு | ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் குருபூசை |
| | 05 | உ | (20-11-2000) | திங்கள் | முதற் சோமவாரம் |
| | 08 | உ | (23-11-2000) | வியாழன் | பிரதோஷ விரதம் |
| | 10 | உ | (25-11-2000) | சனி | அமாவாசை விரதம் |
| | 12 | உ | (27-11-2000) | திங்கள் | இரண்டாம் சோமவாரம் |
| | 14 | உ | (29-11-2000) | புதன் | சதுர்த்தி விரதம் |
| | 16 | உ | (01-12-2000) | வெள்ளி | சேர். பொன். இராமநாதன் நினைவு தினம் |
| | 17 | உ | (02-12-2000) | சனி | ஷஷ்டி விரதம் |
| | 19 | உ | (04-12-2000) | திங்கள் | மூன்றாம் சோமவாரம் |
| | 24 | உ | (09-12-2000) | சனி | சனிப்பிரதோஷ விரதம், திருக்கார்த்திகை விரதம், குமாராலய தீபம் |
| | 25 | உ | (10-12-2000) | ஞாயிறு | சர்வாலய தீபம், வீடுகளில் தீபம் |
| | 26 | உ | (11-12-2000) | திங்கள் | பூரணை விரதம். நான்காம் சோமவாரம். |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சைவபரிபாலன சபை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

இத்தீர்மானத்திற்கமைய நியமிக்கப்பட்ட குழு 1867 ஆம் ஆண்டு தனது அறிக்கையைச் சமர்ப்பித் தது இக்குழுவின் பரிந்துரைக்கமைய, அரசாங்கம் மத் திய பாடசாலை ஆணைக்குழுவை இல்லாதொழித்தது. 1869 ஆம் ஆண்டு பொதுக்கல்விப் பணிப்பாளர் (Director of Public Institution) ஒருவர் நியமிக்கப் பட்டதுடன் பின்வரும் அடிப்படைக் கொள்கையும் ஏற் றுக்கொள்ளப்பட்டது.

''மக்களின் சமயச்சார்பற்ற உலகியற் கல்வியை வளர்ப்பதும் முன்னேற்றுவதும் என்ற குறிக்கோளுடன் கல்விச் சட்ட விதிகளில் குறிப்பிடப்பட்ட நிபந்தனை களுக்கமையத் தரமான உலகியற் கல்வியை அளிப்பதும் சமூகத்தின் நன்மையுடன் ஒத்துப்போகாதன அல்லாத சிந்தாந்தங்களைப் புகட்டுகின்றதுமான சகல பாட சாலைகளுக்கும் அரச மான்யம் வழங்கப்படும்''.

பொதுக்கல்விப்பணிப்பாளரினால் 1969 ஆம் ஆண்டு வெளியிடப்பட்ட கல்விச்சட்ட விதிகள் பின்வரும் சரத் துக்களைக் கொண்டிருந்தன.

''01-01-1870 ஆம் திகதி முதல் அரசாங்க பாட சாலை ஆசிரியர்களுக்கு வழங்கப்படும் சம்பளமும் உதவிப்பணம் பெறும் பாடசாலைகளுக்கான உதவிப்பண மும் சமய சார்பற்ற உலகியற் கல்வியின் பரீட்சை முடிபுகளின் அடிப்படையிலேயே அமைந்திருக்கும்.

உதவி பெறும் பாடசாலைகளுக்கான உதவிப்பணம் பாடசாலை முகாமையாளர்களுக்கு வழங்கப்படும் முகா மையாளர்கள் ஆசிரியர்களுக்கு வழங்க வேண்டிய சம்பளத் தைத் தீர்மானிப்பர்.''

1870 ஆம் ஆண்டின் பின்னர் கொள்கையளவில் கிறிஸ்துவரல்லாதவர்கள் தமது பாடசாலைகளுக்கு நிதி யுதவி பெறக்கூடியதாகவிருந்தது ஆனால் காலத்துக்குக் காலம் கல்விச் சட்ட விதிகள் மூலம் எழுப்பப்பட்ட செயற்கைத் தடைகளைத் தாண்டிய பின்னரே அவர்கள் (இந்துக்கள், பௌத்தர்கள், முஸ்லீம்கள்) அதைப் பெற்றுக் கொள்ளக் கூடியதாயிருந்தது.

1872 ஆம் ஆண்டுக் கடைசியில் யாழ்ப்பாணம் உவெஸ்லியன் மிஷன் (கில்னர்) ஆங்கில பாடசாலைக்கு செல்லும் சைவப் பிள்ளைகள் தமது நெற்றியிலுள்ள விபூதியை அழிக்குமாறு வற்புறுத்தப்படுகிறார்கள் என் பதைக் கண்ட நாவலர் அவ்வாண்டிலேயே ஆங்கில பாட சாலையொன்றை ஆரம்பித்து சிறிது காலத்துக்கு அதன் அதிபராக ஐரோப்பியர் ஒருவரையும் நியமித்திருந் தார். போதியளவு நிதி இல்லாமையாலும் அரசாங்க உதவி பெறும் கிறிஸ்துவ பாடசாலைகளுடன் போட்டி போட வேண்டியிருந்ததாலும் அப்பாடசாலையை மூட வேண்டிய நிர்ப்பந்தம் சில வருடங்களுள் ஏற்பட்டது.

1878 ஆம் ஆண்டு நாவலர் இவ்வுலக வாழ்வை நீத்தார் அவர் ஏற்றி வைத்த சைவக்கல்வி என்ற தீபத்தை அணையா விளக்காகச் சைவமக்கள் காத்தனர். அதற்காக நாவலரது காலத்திலும் அவரது மறைவின் பின்னரும் சைவ சமூகம் எவ்வாறான சக்திகளுடன் போட்டியிட வேண்டியிருந்ததென்பதை 1884 ஆம் ஆண்டு சட்ட நிரூபண சபையில் சேர் (அப்போது திரு.) பொன் இராமநாதன் அவர்கள் பேசிய கீழ்வரும் வாக் கியங்கள் சுருங்கச் சொல்லி விளங்க வைக்கின்றன:

''அவர்களது (மிஷனரிகளது) சகிப்புத் தன்மையற்ற போக்கு காலத்துக்கும் சூழ்நிலைக்கும் ஏற்ப மாறுபட்டுக் கொண்டிருந்ததாகத் தோற்றமளிக்கிறது. ஆனால் அதனை வட மாகாணத்து இந்துக்களின் சீர் திருத்த வெற்றித் திருமகனான (Champion Reformer of Hindus) — ஆறுமுகநாவலர் — 1878 ஆம் ஆண்டு இறந்த பின் இன்றைய நாட்களில் விசேடமாக அவதானிக்கக் கூடி யதாக உள்ளது''

(அடுத்த இதழில் தொடரும்)

# குற்றம் கடிக! குடி காக்க!

(1ம் பக்கத் தொடர்ச்சி)

சந்தேகத்தின் பேரில் காவலில் வைக்கப்பட்டுள்ளவர் களது பாதுகாப்புக்கு அரசாங்கமே முழுப்பொறுப்பு. இது அகில உலகமும் ஏற்றுக்கொண்ட விதி.

இலங்கையின் சமீபகால வரலாற்றில் சிறைச்சாலை களில், தடுப்பு முகாம்களில் மூன்றாவது தடவையாகத் தமிழ் இளைஞர்கள் கொன்று குவிக்கப்பட்டிருக்கி றார்கள். 1983இல் வெலிக்கடையிலும் பின்னர் களுத் துறையிலும் இப்போ பண்டாரவளையிலும் இந்தக் காட்டுமிராண்டித்தனம் நடைபெற்றுள்ளது.

இவ்வாறான அநாகரிக செயல்கள் நடைபெறாத வாறு அரசு விழிப்புடன் இருக்கத் தவறியது மன்னிக்க முடியாத குற்றம். முன்னர் இவ்வாறான செயல்களில் ஈடுபட்டோரைக் கண்டு பிடித்து சட்டத்தின் முன் நிறுத்தித் தண்டனை அளிக்காததும இவ்வாறான செயல் கள் மீண்டும் மீண்டும் நடைபெறக் காரணமாயமை கிறது.

''தமிழர் மீது வெறுப்பைக் காட்டும் காட்டுமிராண் டித் தனமான பல சம்பவங்கள். கொழும்பிலும் அதன் சுற்றுப்புறங்களிலும் நடந்துள்ளன. அநாகரிக சம்பவங் கள் மேலும் நடவாதிருக்கக் கூடிய கண்டிப்பான நடவ டிக்கைகளை அரசு மேற்கொள்ளவேண்டும். மனித விழுமியம் பேணப்பட வேண்டும். தவறின் 1983 ஆம் ஆண்டில் இடம்பெற்ற இனத்துவேஷ செயற்பாடுகளால் நாட்டுக்கு ஏற்பட்ட அபகீர்த்தியும் தலைக்குனிவும் மீண்டும் ஏற்படுவது தவிர்க்க முடியாததாகிவிடும்'' என இந்துசாதனம் ஆறு மாதங்களுக்கு முன் - சித்திரை இதழில் - எச்சரித்திருந்தான்.

**''அறனிழுக்கா தல்லவை நீக்கி மறனிழுக்கா**
**மானம் உடைய தரசு''**

எனச் சுட்டிக்காட்டியிருந்தான்.

பண்டாரவளைச் சம்பவத்தில் ஈடுபட்டவர்களைக் கண்டுபிடித்துத் தகுந்த தண்டனை வழங்கப்படுவதுடன் அரசு விழிப்புடன் செயற்படவும் வேண்டும். தவறின் இவ்வாறான நிகழ்வுகள் மீண்டும் ஏற்படாது எனக் கூற முடியாது என வலியுறுத்திக் கூற விரும்புகிறோம்.

**''தக்காங்கு நாடித் தலைச்செல்லா வண்ணத்தால்**
**ஒத்தாங்கு ஒறுப்பது வேந்து''**

— திருவள்ளுவர்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

(மாணவர் பகுதி)

# துணைக் கோடல்

**அன்புக் குழந்தைகளே!**

கடந்த பல மாதங்களாக உங்களைச் சந்திக்காதது மனதிற்கு வேதனையைத் தந்தது. ஆயினும் நீங்கள் வாசித்துப் பயனடையக் கூடிய பல விடயங்கள் இந்து சாதனம் எல்லா இதழ்களிலும் இருந்தன என நம்புகிறேன். இவ்விதழிலிருந்து மாணவர் பகுதி தவறாது வெளிவர இறைவன் துணை நிற்பாராக.

இம்மாதம் நாவலர் பெருமானது குருபூசை அமைகிறது. சைவசமூகம் கல்வி, ஒழுக்கம், பண்பிற் சிறந்து விளங்க வேண்டுமென்பதற்காகத் தனது உடல், பொருள், ஆவி அனைத்தையும் அர்ப்பணித்த பெரிய மகான் நாவலர் பெருமான். நாவலர் பெருமானது வாழ்க்கையை நீங்கள் முழுமையாக அறிந்திருக்க வேண்டும். அறியும்போது நாமும் இயன்றளவு எமது சமூக முன்னேற்றத்துக்காகப் பாடுபடவேண்டும் என்ற உணர்வு உங்களில் ஏற்படும். அதனை நோக்காகக் கொண்டே சென்ற இதழில் நாவலர் பெருமானின் வரலாற்றுக் குறிப்பை முழுமையாகப் பிரசுரித்திருந்தோம். நீங்கள் அதனை முழுமையாக வாசித்துப் பயனடைய வேண்டும்.

**குழந்தைகளே**

**"பெரியாரைத் துணைக்கொள்"**
**"மேன்மக்கள் சொற்கேள்"**

என்பவை ஔவையார் ஆத்திசூடியிற் சொல்லித்தந்த அறிவுரைகள். "பெரியாரைத் துணைக் கோடல்" என ஒரு அதிகாரத்தையே திருவள்ளுவர் ஆக்கித்தந்துள்ளார்.

அறிவிலே சிறந்த பெரியோர்களை உங்களுக்குத் துணையாகத் தேர்ந்துகொள்ள வேண்டும்.

இந்த எண்ணத்தோடு இவ்விதழில் ஒரு பெரியாரை உங்களுக்கு அறிமுகம் செய்து வைக்க விரும்புகிறேன். அவர் உயர்திரு குமாரசாமி சோமசுந்தரம் அவர்களாவர். ஆசிரியராக, பிரதம கல்வி அதிகாரியாக, கல்விப் பணிப்பாளராக, தேசிய கல்வி நிறுவகத் தமிழ்த் துறைப் பணிப்பாளராகப் பதவி வகித்து இளைப்பாறியவர். தேசிய கல்வி நிறுவகத்தின் தமிழ்க் கல்வித்துறை ஆலோசகராகவும், GTZ என்னும் ஜேர்மன் நிறுவனத்தின் கல்விப்பணி ஆலோசகராகவும் கடமையாற்றுபவர்.

மனித இனத்திற்குப் பெருமதியும் பெருமானமும் பெருமதிப்பும் சேர்க்கக்கூடிய நற்குண இயல்புகளை, நல்ல மனிதப் பண்புகளை, வாழ்க்கை விழுமியல்களை இந்நாட்டின் - எமது சமூகத்தின் - வருங்கால நற்பிரசைகளாக வரப்போகின்ற உங்கள் மனங்களில் பதிய வைக்க வேண்டுமென்ற உயர்நோக்குடன் பேசியும் எழுதியும் வருபவர்.

இப்பெரியார் இந்துசாதன மாணவர் பகுதி மூலம் உங்களை மாதந்தோறும் சந்திக்க இணங்கியுள்ளார் என்ற செய்தி உங்களுக்கு மகிழ்ச்சியைத் தரும். இப்பெரியாரைத் துணைக்கொண்டு அவர் சொற்கேட்டு கல்வி, ஒழுக்கம், பண்புகளில் சிறந்தவர்களாக நீங்கள் அனைவரும் உருவாக வேண்டுமென்பதே எனது விருப்பம்.

அடுத்த இதழில் மீண்டும் கட்டாயம் சந்திப்போம்.

— ஞானகுரு

# கடவுள் உண்டு

**— குமாரசாமி சோமசுந்தரம் —**

சைவப் பெரியார் ஒருவர், ஒரு சமயம், இளைஞர்கள் மத்தியில் ஆன்மிக உரையொன்றினை நிகழ்த்திக் கொண்டிருந்தார். கடவுளைப் பற்றிக் கூறும் போதெல்லாம், "கடவுள் என்றும் உள்ளவர்; எங்கும் நிறைந்தவர்; எல்லாம் அறிபவர், எல்லாம் வல்லவர்" என்று எடுத்துரைத்தார். "சைவசமயத்தவர் தங்கள் முழுமுதற்கடவுளை சிவபெருமான் என்று திருநாமம் இட்டு அழைக்கின்றனர். அவரே நாம் வாழுகின்ற உலகத்திற்குக் கருத்தா ஆகவும் உள்ளார்" என்றும் தொடர்ந்து கூறினார். அங்கிருந்த இளைஞர்கள் விஞ்ஞானங் கற்றவர்கள்; ஆராய்வூக்கம் நிரம்பியவர்கள். எதற்கும், ஏன், எப்படி, என்ன, என்று வினாக்கள் எழுப்பத் தயங்காதவர்கள். காரண காரியத் தொடர்புகளைக் காட்டி, விஞ்ஞான பூர்வமாக ஒன்றை நிருபித்தாலொழிய, எதனையும் சரியென ஏற்றுக் கொள்ளமாட்டார்கள். எனவே, சைவ அறிஞரை நோக்கி, கூட்டத்திலிருந்த அந்த இளைஞர்கள் கேள்விக்கணைகளைத் தொடுத்தார்கள் "கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார் என்றால்; அது உண்மையானால்; அக்கடவுளை எங்களுக்குக் காட்டுங்கள் பார்க்கலாம்" என்பதே அவர்களுடைய முதற்கேள்வி.

"இதில் ஒன்றும் புதுமையில்லை. காலந்தோறும் கேட்டுவரப்பட்ட கேள்வியைத் தான் இப்பொழுது நீங்களும் கேட்கிறீர்கள். முன்னர்க் காலங்களில் இந்தப் பூமி தட்டையா, உருண்டையா என்ற வினாவை எழுப்பி வந்தார்கள். தற்பொழுது பூமி உருண்டை வடிவானது என்பதை ஏற்றுக் கொண்டுவிட்டார்கள். அதனால் அத்தகைய கேள்விகள் கேட்கப்படுவதில்லை. கடவுள் எங்கும் நிறைந்து இருக்கிறார் என்னும் உண்மை எவ்வளவோ காலங்களுக்கு முன்னரே நிருபணமாகி ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டது. என்றாலும் தொடர்ந்தும் பலர் அக் கேள்வியைக் கேட்டு கொண்டே வருகிறார்கள். உண்மையை விளங்கிக் கொள்வதற்கும் அடிப்படை அறிவு வேண்டும்" என்று கூறிய, சைவ அறிஞர், இளைஞர்களின் சந்தேகத்தை நிவிர்த்தி செய்ய வேண்டும் என்பதை உணர்ந்தவராய், இறைவனை நினைந்து தியானித்து விட்டு, "கடவுள் எங்கும் நிறைந்திருக்கிறார்; அவர் இல்லாத இடமே இல்லை; கடவுள் சர்வவியாபகர் என்பதை நிருபித்துக்காட்ட முடியும்" என்று உறுதியாகக் கூறினார். எல்லோரும் ஆவலோடு சைவப் பேரறிஞரின் முகத்தையே உற்றுப்பார்த்த வண்ணம் இருந்தனர். பேரறிஞர் ஒரு கோப்பை பால் தரும்படி கேட்டார்.

(15 ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# செங்கோட்டில் வாழுஞ் செழுஞ்சுடர்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

அர்த்தநாரீஸ்வரர் உற்சவத் திருமேனி மிக அற்புதமானது. வலது (ஆண்) பக்கத்தில் கையில் தண்டாயுதம், இடது (பெண்) பக்கத்தில் கை இடுப்பில் வைத்த அமைப்பு மார்பில் பெண் பக்கத்தில் முலை திருவடிகளில் ஒன்றில் சிலம்பு மற்றொன்றில் கழல். கண்களில் கூட ஆண் பெண் பாக வேறுபாடு. ஒரு மயிரிழையில் அகலமாகவும் குறுகலாகவும் காட்டப்பட்டுள்ளன.

கேதாரகௌரி இங்குதான் மரகத லிங்கத்தைப் பூசித்து இடப்பாகம் பெற்றதாக வரலாறு.

திருஞானசம்பந்தப் பெருமானின் தேவாரம் பெற்ற திருத்தலம் திருச்செங்கோடு. செங்குன்றூர் அமர்ந்த செல்வனைத் தொழுபவர்கள் அல்லல் யாவும் அறும் என்கிறார் சம்பந்தர்:

"வெந்த வெண்ணீ றணிந்து விரிநூல் திகழ்
மார்பினல்ல
பந்தணவும் விரலாள் ஒரு பாகம் அமர்ந்தருளிக்
கொந்தணவும் பொழில்சூழ் கொடிமாடச்
செங்குன்றூர் நின்ற
அந்தணனைத் தொழுவார் அவலம் அறுப்பவரே"

என்பது அவர் வாக்கு.

சம்பந்தப்பெருமான் கொங்குநாட்டுத் தலயாத்திரையில் முதலில் இப்பதியை வணங்கி பின்பு வேறு சில ஊர்களுக்குச் சென்று விட்டுத் திரும்பவும் இங்கு வந்த போது, அவருடன் வந்த அடியார்களை 'நளிர் சுரம்' பற்றி வருத்தியது அப்போது

"அவ்வினைக் கிவ்வினையாமென்று சொல்லுமஃதறிவீர்
உய்வினை நாடாதிருப்பதும் உந்தமக்கு ஊனமன்றே
கைவினை செய்து எம்பிரான் கழல் போற்றுதும்
நாமடியோம்
செய்வினை வந்தெமைத் தீண்டப்பெறா
திருநீலகண்டம்"

என ஆணையிட்டு கொங்குநாடு முழுவதும் பிணி தீர்த்தார் ஞானசம்பந்தர்.

சந்தர்ப்பம் கிடைப்பவர்கள் சேலார் வயற்பொழில் செங்கோடனையும் அர்த்தநாரீஸ்வரரையும் கண்டு தொழுது அவலம் அறுப்பார்களாக

விழிக்குத்துணை திருமென்மலர்ப் பாதங்கள்
மெய்மைகுன்றா
மொழிக்குத்துணை முருகா எனும் நாமங்கள்
முன்புசெய்த
பழிக்குத்துணை அவன் பன்னிரு தோளும்
பயந்த தனி
வழிக்குத்துணை வடிவேலும் செங்கோடன் மயூரமுமே

— கந்தரலங்காரம்

# திருக்கார்த்திகைத் தீபத் திருநாள்

(4 ம் பக்கத் தொடர்ச்சி)

திருவண்ணாமலையில் திருக்கார்த்திகையை இறுதி நாளாகக்கொண்டு பத்துநாள் மகோற்சவம் நடைபெறும். திருக்கார்த்திகையன்று மலையுச்சியில் உள்ள ஒரு பிரமாண்டமான தொட்டியில் பல ஆயிரம் கிலோ எடையுள்ள நெய்யூற்றி பல மீற்றர் நீளமுள்ள துணியிலான திரிகொண்டு இராட்சத தீபமொன்று ஏற்றப்படும். அதன் ஒளி கீழே தெரியாதபடி திரையிட்டுமறைக்கப் பட்டிருக்கும். மாலையில் அருணாசலேஸ்வரப் பெருமான் சர்வாலங்காரராக வெளிப் பிரகாரத்துக்கு எழுந்தருளுவர். சரியாக மாலை ஆறு மணிக்கு ஆகாச வாணம் ஒன்று கடப்படும். வாணம் வருவதைக் கண்டவுடன் மலைமேல் உள்ளவர்கள் திரையை நீக்குவர். கீழே கூடியுள்ள இலட்சக்கணக்கான மக்கள் மலையுச்சியில் தெரியும் தீப ஜோதியை வழிபடுவர். இத் தீபம் ஒரு சில தினங்கள் வரை எரியும்.

மாயையாகிய திரை விலக பரம்பொருளாகிய சிவபெருமான் பசுக்களாகிய ஆன்மகோடிகளுக்கு ஞானச் சுடர் விளக்காய்க் காட்சி தருவதை இவ்விழா உணர்த்துகிறது.

"ஞானச்சுடர் விளக்காய் நின்றாய் போற்றி"

### ஓதியது எப்பொருள் தான்?

" நாதா குமரா நமவென் றரனார்
ஓதா யெனவோ தியதெப் பொருள்தான்
வேதா முதல் விண்ணவர் சூடுமலர்ப்
பாதா குறமின் பதசே கரனே. "

—கந்தரனுபூதி

(சுவாமிமலை எனப்படும் நான்காவது ஆறுபடை வீடாகிய திருவேரகத் தமர்ந்த தகப்பன் சாமியாகிய குருநாதனுக்கு ஐப்பசித்திங்கள் இருபத்து நான்காம் நாள் (09 - 11 - 2000) மகா கும்பாபிஷேகம் சிறப்புற நடைபெற்றது.)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மகான் காசிவாசி சி. செந்திநாத ஐயர்

(2 ம் பக்கத் தொடர்ச்சி)

தரும் ஆதி சைவநாமக கவுலேயக முகபங்க முற்கரம் என்னும் நூலையும் தாந்திரிக கண்டனம் என்னும் நூலையும் எழுதிப்பதித்து ஒழுகும் சைவ சமயத்தவர்களையும் வெகுவாக நிந்தனை செய்து வந்தார்.

இத்தகைய கண்டனங்களையும் தாக்குதல்களையும் பொறுத்துக்கொண்டிருக்கமாட்டாத துணிவுமிக்க ஐயரவர்கள் சந்நியாசியாரை நேரடியாகத் தாக்குவதற்கு வஜ்ரடங்கம (வச்சிரதண்டம்) என்னும் கண்டனத்தையும் தாந்திரிகதுண்ட கண்டன கண்டனம் என்னும் நூலையும் எழுதிப்பரப்பினார்.

ஐயரவர்கள் எழுதிய கண்டன நூல்களுள் மகாவுக்கிர வீரபத்திராஸ்திரம் என்பதும் ஒன்று. அதைச் சைவப் பெரியாரராய சாம்பவஸ்ரீ சதாசிவ பண்டித சிவாசாரியர் என்பவர் தம்பொறுப்பில் அட்சிட்டுப் பரப்பினார் என்பர். இங்ஙனமே ஐயரவர்களின் கட்டுரைகள் பலவற்றைச் சைவப்பெரியார் முன்வந்து உதவி செய்து அச்சிட்டுப் பரப்பினர்.

தமிழ்நாட்டிலே சென்னை நகரில் தலைமையலுவலகம் அமைத்திருந்த வேதாந்த விசாரணைச் சபையார் அக்காலத்து நெருக்கடியில், புறச்சமயத்தார் விடுத்த பிரசாரங்களுக்குச் சுடச்சுடப் பதிலடி கொடுத்து வந்த போதெல்லாம் ஐயரவர்களின் அம்புபோன்ற சொற்கள் சைவப்பாதுகாப்புக்கு வெகுவாக உதவி செய்தன.

(அடுத்த இதழில் தொடரும்)

# கடவுள் உண்டு

(13 பக்கத் தொடர்ச்சி)

ஒரு கோப்பை நிறையப் பால் கொண்டு வந்து அறிஞர் முன்வைக்கப்பட்டது. பாலையே உற்று நோக்கிய படி மிக அமைதியாகப் பேரறிஞர் சிறிது நேரம் இருக்கக் காணப்பட்டார். பாலை அவர் பருகவில்லை. வினாவுக்கும் விடையளிக்கவில்லை. தங்கள் வினாவிற்குத் தகுந்த விடையை எதிர்பார்த்துக் கொண்டிருந்தவர்கள் பொறுமையை இழந்தனர். சிறிது சலசலப்பும் ஏற்பட்டது. இவையாவற்றையும் அவதானித்த சைவப் பேரறிஞர், ''சற்றுப் பொறுமையாக இருங்கள். உங்கள் வினாவுக்குரிய விடையை இந்தப் பாலுக்குள்ளேதான் தேடிக் கொண்டிருக்கிறேன். விரைவில் கண்டுபிடித்து விடுவேன். ஒரு நிமிடம் பொறுங்கள்.'' என்றவர் தொடர்ந்தும் பாலையே கூர்ந்து பார்த்துக் கொண்டிருந்தார். சற்று நேரத்தில் அங்கிருந்தவர்களிடம், பாலைக் காண்பித்து, ''பாலுக்குள் நெய் இருக்கிறதாகக் கூறுகிறார்கள் கேள்விப்பட்டிருக்கிறேன். ஆனால் இந்தக் கோப்பை பாலுக்குள் நெய்யை என் கண்களால் காண முடியவில்லை. அதனால் பாலுக்குள் நெய் இல்லை என்று திடமாகக் கூறுவேன். எத்துணை கூர்மையாகவும் நுணுகியும் பார்த்தாலும் அந்த நெய் என் கண்களுக்குத் தெரியவில்லை'' என்று சொல்லிவிட்டு ''உங்கள் யாரினதும் கண்களுக்குத் தெரிகிறதா, வந்து பாருங்கள்'' என்றார்.

இதைக் கேட்ட அந்தச் சபையினர் பலத்துச் சிரித்தனர். ''ஐயா, பெரியவரே பாலில் நெய் வெளியாகத் தோன்றாது என்று உங்களுக்குத் தெரியாதா, என்ன? அவசரப்பட்டு பாலில் நெய் இல்லை என்ற முடிவுற்கு வரவேண்டாம். பாலில் நெய்யில்லாத பகுதியே இல்லை. நெய், பாலில் மறைந்துள்ளது. அதனால் கண்களுக்குத் தெரியவில்லை. உங்கள் கண்களுக்குத் தெரியவில்லை என்பதற்காக பாலில் நெய் இல்லை என்று எப்படிச் சொல்ல முடியும். பாலுக்குச் சுவையைத்தருவது அதனுள் இருக்கும் நெய் என்பதை அறிந்து கொள்ளுங்கள்'' என்றான் ஓர் இளைஞன். அதற்கு அப்பெரியார் ''நல்லது. பாலில் இருந்து நெய்யை வேறாகப் பிரித்துக் காட்ட முடியுமா?'' என்று கேட்டார். ''ஏன் முடியாது முடியும்'' என்ற, அந்த இளைஞன், 'பாலைக் காய்ச்சி ஆறவைத்து, சிறிது உறையிட்டு வைத்தால், சில மணி நேரத்திற்குப் பின் உறைந்து தயிர் ஆகும். தயிரை மத்தினால் நன்கு கடைந்தால் வெண்ணெய் திரளும். வெண்ணெய்யை உருக்கினால் நெய் வரும். இதற்கு சில மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டும்'' என்றான். அதைக் கேட்ட சைவப் பேரறிஞர் புன்முறுவல் பூத்தார். ''நல்லது கடவுளைக் காணும் முறையை நீங்களே அறிந்து வைத்திருக்கிறீர்கள். என் வேலை சுலபமாகி விட்டது. விறகில் தீயினன், பாலிப்படுநெய் போல் மறைய நின்றுளன் மாமணிச் சோதியன் என்பதை அறிந்து கொள்ளுங்கள். பிரபஞ்சத்தின் ஒவ்வோரு பொருளிலும், உயிரிலும், ஏன் ஒவ்வோர் அணுவிலும் இறைவன் நீக்கமற நிறைந்துள்ளான். அவன் இன்றி ஓர் அணுவும் அசையாது. அந்த எங்கும் நிறைந்த பரம்பொருளை, நாம் நிதர்சனமாகக் காணலாம். அதற்கு எம்மைப் பக்குவப்படுத்திக் கொள்ள வேண்டும். ஆன்மிக நடைமுறைகளைச் சிரத்தையுடன் பின்பற்றி வந்தால் நிச்சயம் கடவுளைக் காணமுடியும் அருளாளர், அனுபூதிமான்கள் கண்டு பேரானந்தம் பெற்றுள்ளனர். பாலைத் தயிராக்கி, அதனைக் கடைந்து நெய்யைக் கண்டது போல, நாமும் எம்மை சைவ ஒழுக்கங்களாலும், சாதனைகளாலும் பண்படுத்தி, பக்குவப்படுத்தி வரும் போது, எம்முள் கலந்திருக்கும் இறைவன் எம் உள்ளத்தாமரையில் காட்சியளித்துத் திருவருள் பாலிப்பார். அப்போது கடவுளின் கருணையையும், பெருமையையும், எங்கும் நிறைதன்மையையும் அனுபவரீதியில் நீங்கள் உணரமுடியும்'' என்றார் அந்தச் சைவப் பேரறிஞர். எல்லோரும் கேட்டு மகிழ்ந்தனர்.

''சிவம் உண்டு பயம் இல்லை.''

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# The Great Arumuga Navalar

Sri La Sri Arumuga Navalar, the Champion Reformer of Hindus and the greatest of the men to whom the soil of Jaffna ever gave birth attained Bliss on Karthigai Maham. The Saiva Thamil world is observing the 121st Guru Pooja of this **'Avatara Purushar'** on 19 November 2000.

Many of us are not aware that Navalar was a great patriot. In our last issue we published, in Tamil, a brief chronological history of the life of this great man.



The work done by Navalar -that too within a short span of fifty seven years-was enormous and varied. No one could claim such a noble and variegated life as that of Navalar. His carrier is inimitable.

Navalar was a honorary teacher, founder and administrator of schools, proprietor of printing presses and publisher of books, commentator, annotator, editor, translator, poet, collector of rare manuscripts, orator, polemic writer, pamphleteer, author of textbooks, applicant for funds, alleviator of fellow men's sufferings in times of epidemic and famine, ventilator of grievances through memorials, organiser of public meetings and debates, social religious and political reformer, litigant and frequent traveller to South India. He combined all these roles in him with a view to bettering mankind.

The Saiva world has not seen another like Navalar for several centuries. Navalar was born at a time when

— the Saiva Religion had been in the strangle - hold of alien forces for two centuries.

— the Thamil Literature and Grammer was gaoled in ola leaves, and

— Jaffna was groping in the dark for a leader.

Navalar came, saw and gave them all relief. He rejuvenated Saivism, brought out its latent powers, and fully armed it for defence, and even for offence.

Navalar wiped out literary monopolies by printing the more important Thamil works in a press of his own and becoming a teacher himself, and spreading knowledge far and wide by writing and preaching

In the midest of his ardous but self imposed labours, he watched the interests of his country silently, without proclaiming to the world what he was doing. He always left in the hands of others the political development of his country, and appeared at the fore-front only when his services were in urgent need.

Reading about the noble life and activities of this great patriot and Reformer will inspire the younger generation to work for noble ideals Books on the life and activities of Navalar should be made freely available to the younger generation.

Edited & Published by Professor R. Kumaravadivel on behalf of the Saiva Paripalana Sabai - Jaffna of 450, K. K. S. Road, Jaffna & Printed at Bharathi Pathippakam, 430, K. K. S. Road, Jaffna 11-11-2000 (Fullmoon Day).

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org